Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2037 ஆவணி 25 ஞாயிற்றுக்கிழமை (10.09.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 285

# முகமாலையில் புலிகளின் நிலைகள் மீது அரசுப் படைகள் முன்னேறித் தாக்குதல்!

## அதிகாலை முதல் நீடித்த கடுஞ் சண்டையில் 25 சிப்பாய்கள் பலி! 126 பேர் காயம்!!

கொழும்பு,செப்ரெம்பர்10

முகமாலை மற்றும் எழுதுமட்டுவாள் பகுதிகளில் உள்ள தங்களின் முன்னரங்க நிலைகளில் இருந்து அரசுப் படைகள் முன்னேறி விடுதலைப் புலிகளின் நிலைகள் மீது தாக்குதல் நடத்தியிருக்கின்றன.

நேற்று அதிகாலை 3.30 மணிமுதல் மேற்கொள்ளப்பட்ட இந்தப் படை நடவடிக்கையின் போது அரசுப் படைகளை எதிர்கொண்டு புலிகள் கடும் எதிர்ச் சமர் புரிந்துள்ளனர். இரு தரப்புகளுக்கும் இடையே பல மணிநேரம் சண்டை நீடித்ததாகத் தெரியவருகிறது.

நேற்றைய சண்டையில் இராணுவத் தரப்பில் 25 சிப்பாய்கள் வரை உயிரிழந்துள்ளனர். 125 இற்கும் அதிகமானோர் காயமடைந்து களத்தில் இருந்து அப்புறப்படுத்தப்பட்டிருக்கின்றனர்.

இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் பிரசாத் சமரசிங்கவை மேற்கோள்காட்டி சர்வதேச செய்திச் சேவைகள் இத்தகவலை வெளியிட்டன.

இராணுவம் தனது முன்னரங்க நிலைகளில் இருந்து மட்டுப்படுத்தப்பட்ட ஒரு நடவடிக்கையை மேற்கொண்டதைக் கொழும்பில் இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் பிரசாத் சமரசிங்க ஒப்புக்கொண்டார்.

இராணுவத்தினர் முன்னேறிய பகுதிகளில் நிலைகொண்டுவருவதாகவும் அதன் பொருட்டு வான் தாக்குதல்கள் நடத்தப்பட்டதாகவும் விடுதலைப் புலிகளின் ஆட்லறித் தளங்களைத் தகர்க்கும் நோக்குடன் எதிர்த் தாக்குதல்கள் நடத்தப்பட்டதாகவும் இராணுவப் பேச்சாளர் பிரசாத் சமரசிங்க தெரிவித்தார்.

புலிகளின் பீரங்கி நிலைகளை பின்நகர்த்துவது இத்தாக்குதலின் நோக்கம் என்றும் அவர் தெரிவித்தார்.

புலிகளின் நிலைகள் மீது முதலில் கடும்

(08ஆம் பக்கம் பார்க்க)

## சம்பூர், கட்டைபறிச்சான் தமிழர் சொந்த இடங்களில் மீளக்குடியமர மறுப்பு

திருகோணமலை மாவட்டத்தில் சம்பூர், கட்டைபறிச்சான் ஆகிய பகுதிகளிலிருந்து இடம் பெயர்ந்த தமிழ் மக்கள் மீண்டும் தமது பகுதிகளில் மீளக் குடியமர மறுப்புத் தெரிவித்துள்ளனர். மூதூர், சம்பூர், கட்டைபறிச்சான் ஆகிய பகுதிகளில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகள் காரணமாக இடம்பெயர்ந்த 4 ஆயிரத்து 718 தமிழர்கள் திருகோணமலை நகரில் உள்ள பன்னிரண்டு முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். இவர்களில் மூதூரைச் சேர்ந்த ஒரு பகுதியினர் பஸ்கள் மூலம் நேற்று அங்கு அனுப்பிவைக்கப்பட்டார்கள் என்றும் - எனினும் கட்டைபறிச்சான், சம்பூர் பகுதிகளைச் சேர்ந்த மக்கள் தமது இருப்பிடங்களுக்கு திரும்ப மறுத்துவிட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

அதேவேளை - மூதூரில் இருந்து இடம் பெயர்ந்து கந்தளாயில் தங்கியிருந்த 42 ஆயிரம் முஸ்லிம் மக்கள் படிப்படியாக மீளக்குடியமர்த்தப்பட்டு வருகின்றனர்.

அவர்களின் இறுதித்தொகுதியினர் நேற்று பஸ்கள் மூலம் அழைத்துச் செல்லப்பட்டனர் என்று அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (1-151)

## கப்பல் பயணிகள் நேற்று மாலை திருகோணமலை சென்றடைந்தனர்

திருகோணமலை,செப். 10

குடாநாட்டில் இருந்து நேற்று முன்தினம் கப்பல் மூலம் அழைத்துச் செல்லப்பட்ட 800 பயணிகளும் நேற்று மாலை திருகோணமலையை வந்தடைந்தனர்

கடந்த மாதம் 11ஆம் திகதி குடாநாட்டில் ஆரம்பமான மோதல் சம்பவம் காரணமாக ஏ-9 வீதி மூடப்பட்டதையடுத்து தெற்கே செல்ல முடியாத நிலையில் இருந்தவர்களில் 800 பேர் நேற்று முன்தினம் கப்பல் மூலம் அழைத்துச்செல்லப்பட்டிருந்தனர். காங்கேசன்துறை துறைமுகத்தில் இருந்து நேற்று அதிகாலை 5 மணிக்குப் புறப்பட்ட இக்கப்பல் நேற்று மாலை 6.30 மணியளவில் திருகோணமலை அஷ்ரப் இறங்குதுறையை வந்தடைந்தது. (1-151)



திருமலை சென்றடைந்த பயணிகள் கப்பலிலிருந்து வயோதிப மாது ஒருவரை இறக்கும் கடற்படையினர்.

## தமிழினம் தனது இருப்பை உறுதிப்படுத்த போரைத் தவிர வேறு வழி எதுவுமில்லை!

### நிதித்துறைப் பொறுப்பாளர் தமிழேந்தி தெரிவிப்பு

முல்லைத்தீவு,செப்.10

தமிழினம் தனது இருப்பை உறுதிப்படுத்த போர் ஒன்றைத் தவிர வேறு எந்த முடிவும் அற்ற நிலையில் வாழ்ந்துகொண்டிருக்கின்றது.

- இவ்வாறு தெரிவித்துள்ளார் தமிழீழ நிதித்துறைப் பொறுப்பாளர் செ.வ.தமிழேந்தி.

லெப்.செல்லக்கிளி நினைவாக, முல்லைத்தீவு உடையார்கட்டு மகா வித்தியாலயத்தில் 87லட்சம் ரூபா செலவில் நிறுவப்பட்ட வகுப்பறையின் கையளிப்பு நிகழ்வு நேற்று நடைபெற்றது. இது தொடர்பாக ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வில் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

பாடசாலை அதிபர் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், நிதித்துறைப் பொறுப்பாளர் தமிழேந்தி மேலும் தெரிவித்ததாவது-

எமது இளம் தலைமுறை சிறந்த அறிவு பெற்ற சமூகமாக வளர வேண்டும் என்பதற்காக தமிழீழத் தேசியத்தலைவரின் திட்டங்களை செயற்படுத்தும் வகையில் கல்விக்கு பெரும் பங்களிப்பு செய்யப்படுகிறது.

கட்டடங்கள் கட்டி வழங்கப்படுதல் மற்றும் சிறப்புப் பாடங்களுக்கான ஆசிரியர்களை நியமித்தல் என்பனவும் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. இந்தப் பணி எமது குழந்தைகளின் நல்வாழ்விற்கான எமது இனத்தின்

(08ஆம் பக்கம் பார்க்க)

## வன்னியில் இருந்து சிகிச்சை பெற வந்தோர் சொந்த இடம் திரும்ப முடியாத நிலையில்!

யாழ்ப்பாணம்.செப்.10

யாழ்.போதனா வைத்தியசாலையில் தங்கிச் சிகிச்சை பெற்றுவந்த கிளிநொச்சியைச் சேர்ந்த சுமார்150 பேர், உரிய சிகிச்சை பெற்றதன் பின்னரும் வைத்தியசாலையில் தங்கியுள்ளனர் என்றும் -

சம்பந்தப்பட்டவர்களை அவர்களது சொந்த இடங்களுக்கு அனுப்பிவைக்க உரியவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் - யாழ்.போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஏ.ஈ.ஞானசோதி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பாக வைத்தியசாலைப் பணிப்பாளர் 'உதயனுக்கு' தெரிவித்ததாவது-

யாழ். வைத்தியசாலையில் தங்கிச் சிகிச்சை பெற்றுவந்த கிளிநொச்சியைச் சேர்ந்த சுமார் 150 நோயாளர்கள் அவர்களது இடங்களுக்குச் செல்லமுடியாத நிலையில் தங்குமிட வசதிகள் இன்றி பெரும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

இந்த நோயாளர்களை தொடர்ந்தும் வைத்தியசாலையில் தங்கவைக்க முடியாதுள்ளது. காரணம்தினசரி மேலும் பல நோயாளர்கள் விடுதிகளில் அனுமதிக்கப்படுகின்றனர். இதனால் விடுதிகளில் இடநெருக்கடி ஏற்பட்டுள்ளது.

எனவே நோயாளர்களை உரிய இடங்களுக்கு அனுப்பிவைக்க நடவடிக்கை எடுக்குமாறு யாழ். அரச அதிபர் சர்வதேச செஞ்சிலுவைக் குழு. அகதிகளுக்கான ஐ.நா. தூதரகம்

(08ஆம் பக்கம் பார்க்க)

## 3,800 தொன் உணவுப் பொருள்களை இறக்கும் பணி காங்கேசனில் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,செப்.10

குடாநாட்டுக்கு அத்தியாவசியப் பொருள்களுடன் வந்து சேர்ந்துள்ள 'றுகுனு' கப்பலில் இருந்து பொருள்கள் இறக்கும் பணிகள் நேற்றுக் காலை ஆரம்பமாகின.

காங்கேசன்துறையில் தரித்துள்ள கப்பலில் இறக்கப்படும் பொருள்கள் உடன் ப.நோ.கூ.சங்கங்களுக்கு அனுப்பப்பட்டு வருவதாகச் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. இக்கப்பலில் மூவாயிரத்து 800 மெற்றிக் தொன் உணவுப் பொருள்கள் எடுத்துவரப்பட்டுள்ளன என்றும்-

பொருள்கள் இறக்கும் பணிகள் நடைபெறுகின்றன என்றும் - அரச அதிபர் கே. கணேஸ் நேற்றுத் தெரிவித்தார். அரச அதிபர் நேற்று காங்கேசன்துறைக்குச் சென்று பொருள்கள் இறக்கும் பணிகளைப் பார்வையிட்டார்.

அரிசி, மா, சீனி, பருப்பு, பால்மா போன்ற அத்தியாவசிய பொருள்கள் உட்பட ஏனைய

(08ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## படுகொலைகள்

யாழ்ப்பாணம்.செப்.10

யாழ். நகரப் பகுதியில் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்துக்குச் சமீபமாக வைத்து ஒருவர் நேற்று முற்பகல் 11 மணியளவில் இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

நல்லூரைச் சேர்ந்த நடராசா ஜெகதீஸ்வரன்(வயது37) என்பவரே சுட்டுக்கொல்லப்பட்டவராவார்.

கொழும்பில் வசிக்கும் இவர் நெடுந்தீவில் கடந்த ஒகஸ்ட் மாதம் நடந்த உற்சவத்தில் கலந்துகொள்வதற்காக யாழ்ப்பாணம் வந்திருந்தார் என்றும் -

கொழும்பு செல்வதற்காக சிவில் நிர்வாக அலுவலகத்துக்குச் சென்று அதிகாரிகளுடன் கலந்துரையாடிவிட்டுத் திரும்பிய சமயம் சுட்டுக்கொல்லப்பட்டார் என்றும் - விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

யாழ்.நீதிவான் இ.த.விக்னராஜா சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணைகளை நடத்தி, பிரேத பரிசோதனையின் பின் சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்கும்படி உத்தரவிட்டார். (1-15-78-68)

* * *

யாழ்ப்பாணம்,செப்.10

கொழும்புத்துறை, பாண்டியன்தாழ்வில் நேற்றுக்காலை 9 மணியளவில் இனந்தெரியாதவர்களால் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

ஆனைக்கோட்டை, சாவற்காட்டைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையான ராசேந்திரம் ராசமயில்(வயது 26) என்பவரே சுட்டுக்கொல்லப்பட்டவராவார்.

மேசன் தொழிலாளியான இவர், அரியாலையைச் சேர்ந்த செபஸ்ரியான் வின்சன்ரைன் (வயது 44) கொய்யாத்தோட்டத்தைச் சேர்ந்த எஸ்.ரட்ணமூர்த்தி(வயது 40) ஆகியோருடன் சென்றுகொண்டிருந்த சமயம் சுடப்பட்டார்.

காயமடைந்த மற்றிருவரும் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளனர். (15-78-68-203)

* * *

ஆனைக்கோட்டை, ஆறுகால்மடத்தில் நேற்றுமுன்தினம் இரவு சூட்டுக்காயங்களுடன் இளைஞர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

கடந்த 7 ஆம் திகதி தொடக்கம் காணாமல் போயிருந்த சுழிபுரத்தைச் சேர்ந்த நவரட்ணம் கருணதாஸ் (வயது 26) என்பவரின் சடலமே இதுவென இனங்காணப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (15-78-68-203)

* * *

யாழ்ப்பாணம்,செப்.10

ஆனைப்பந்தியில் நேற்றுமுன்தினம் மாலை நகைக் கடை உரிமையாளர் ஒருவர் இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

யாழ்.நகரில் நகைக்கடை நடத்திவரும் நல்லூர் கோயில் வீதியைச் சேர்ந்த சதாசிவம் சத்தியசீலன் (வயது 37) என்ற குடும்பஸ்தரே சுட் டுக்கொல்லப்பட்டவராவார்.

நேற்றுமுன்தினம் மாலை கடையைப் பூட்டிவிட்டு வீடு திரும்பிக்கொண்டிருக்கையில் ஆனைப்பந்தியில் வைத்து இவர் சுடப்பட்டார் என்றும் -

கடந்த வருடம் ஒகஸ்ட் மாதத்தில் நடந்த நல்லூர் உற்சவ காலத்தில் இவர் இனந்தெரியாதோரின் வெட்டுக்காயங் களுக்கு இலக்காகி யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றவர் என்றும் விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

யாழ்.நீதிவான் இ.த.விக்னராஜா நேற்றுக் காலை சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணைகளை நடத்தியபின்னர் பிரேத பரிசோதனையின் பின் சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்கும்படி உத்தரவிட்டார். (1-15-78-68-79-203)

* * *

யாழ்ப்பாணம்,செப்.10

புத்தூர் வாதரவத்தைப் பகுதியில் நேற்றுக் காலை 6.30 மணியளவில் சூட்டுக்காயங்களுடன் இளைஞன் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

அடையாளம் காணப்படாத நிலையில் சடலம் யாழ்.ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட இளைஞன் கறுப்பு, வெள்ளை நிற ஜீன்ஸும் பச்சை நிற ரீசேர்ட்டும் அணிந்திருந்தார். (15-78-68-203)

## மருந்து, எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக கிளிநொச்சி மருத்துவமனை ஸ்தம்பிக்கும் நிலை

### வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி கவலை

கிளிநொச்சி.செப்.10

மருந்து மற்றும் எரிபொருள் என்பன முற்றாகத் தீர்ந்த நிலையில் கிளிநொச்சி பொது மருத்துவமனையின் செயற்பாடுகள் ஸ்தம்பிக்கும் நிலை ஏற்பட்டுள்ளதாக மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் எஸ்.சதானந்தன் தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே நாளாந்த சிகிச்சைகளுக்குத் தேவையான மருந்துகள் முற்றாக முடிவடைந்துள்ளன.

நேற்றுடன் வைத்தியசாலையின் சத்திர சிகிச்சைப் பிரிவு உட்பட அனைத்துப் பிரிவுகளும் இயங்குவதற்குத் தேவையான எரிபொருளும் முற்றாக தீர்ந்துபோய்விட்டது.

இந்த அவல நிலையை முடிவுக்குக் கொண்டுவர உடனடியாக உதவிகளை வழங்குமாறு சகல பொது அமைப்புக்களிடமும் சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்களிடமும் வேண்டுகோள் விடுத்துள்ளோம். - என்று அவர் செய்தி ஊடகம் ஒன்றுக்குத் தெரிவித் துள்ளார். (203)

## ஊரடங்கு வேளையில் சுடப்பட்டவர் சிகிச்சை கிடைக்காமல் உயிர் நீத்தார்

### கட்டுடை குடியேற்றத் திட்டத்தில் சம்பவம்

யாழ்ப்பாணம். செப்.10

இரவு ஊரடங்குநேரத்தில் சுடப்பட்ட ஒருவர் ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்ல முடியாத நிலையில் மனைவியுடன் கதைத்தபடியே உயிரிழந்தார் என்று தெரியவருகிறது. கட்டுடை குடியேற்றத்திட்டத்தில் இனம் தெரியாத நபர்களினால் சுட்டுக்கொல்லப்பட்ட கனகநாயகன் ஜெகநாதன் என்பவரின் மனைவி ஜெகநாதன் செல்வரஞ்சினி கண்ணீர்மல்க இத்தகவலை தெரிவித்தார்.அவர் மேலும் தெரிவிக்கையில்;

எனது கணவர் ஏற்கனவே ஒரு கால் ஊனமுற்றவர். நாங்கள் குடியேற்றத் திட்டத்தில் இரண்டு பிள்ளைகளுடன் வறுமையால் வாழ்ந்து வந்தோம். கணவர் சுடப்பட்ட வேளையில் தன்னைக் காப்பாற்றுமாறு கேட்டார். என்னால் ஊரடங்கு நேரத்தில் ஒன்றும் செய்ய முடியவில்லை. இரவு எட்டு மணிக்கு சுடப்பட்ட அவர் அன்றிரவு இரண்டு மணிக்கு தன்னுடன் பேசியவாறு உயிர் துறந்துள்ளார். எனது கணவர் மட்டக்களப்பு ஏறாவூரைச் சேர்ந்தவர். அவரின் உறவினர்களுக்குக் கூட அறிவிக்க முடியாத அவலநிலையில் மிக வறுமையில் வாழுகின்றேன். என்று திருமதி ஜெகநாதன் செல்வரஞ்சினி தெரிவித்தார். (ப-95)

## தீவுப் பகுதிக்குள் பிரவேசிக்கும் அரச அலுவலர்களுக்கு நிரந்தர 'பாஸ்' முறை

யாழ்ப்பாணம்.செப்.10

தீவகப் பகுதிக்குள் பிரவேசிக்கும் அரசாங்க அலுவலர்களுக்கு அல்லைப்பிட்டியில் வைத்து நிரந்தர பாஸ் வழங்கப்படுகிறது.

கடற்படை அதிகாரிகளால் அரச அலுவலர்களின் தேசிய அடையாள அட்டை பார்வையிடப்பட்டதன் பின்னர் அவர்களால் வழங்கப்படும் சிட்டையை நிரப்பி வழங்குபவர்களுக்கு பிரத்தியேக இலக்கம் மற்றும் தேசிய அடையாள அட்டை என்பன பொறிக்கப்பட்ட நிரந்தர பாஸ் வழங்கப்படும்.

எதிர்காலத்தில் தீவகப் பகுதிக்குள் உள்நுழையும் அரசாங்க அலுவலர்கள் நிரந்தர பாஸ் உள்ளவர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை அரசாங்க அதிகாரிகள் மற்றும் பொது மக்கள் பண்ணை மற்றும் அல்லைப்பிட்டி பகுதி சோதனை முகாம்களில் சோதனைக்குட்படுத்தப்படுவதுடன் நீண்டதூரம் பயணம் செய்தே அல்லைப்பிட்டியில் போக்குவரத்து செய்ய வேண்டியுள்ளது.

இதனால் ஊனமுற்றவர்கள், வயதானவர்கள், நோயாளிகள் பெரும் சிரமப்படுவதனை காணக்கூடியதாகவுள்ளது. (ப-95)

## கூட்டுறவுக் கடைகளில் முகாமையாளர்கள் தம் விருப்பப்படி பொருள்களை விற்கிறார்கள்

### பொதுமக்கள் தெரிவிக்கும் முறைப்பாடு இது

அச்சுவேலி.செப்.10

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் கிளை நிலையங்களிலும் மாறுபட்ட விலைகளில் பொருள்கள் விற்பனை செய்யப்படுவதாக பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

பங்கீட்டு பொருள்கள் விநியோகிப்பதில் உள்ள நெருக்கடி மக்கள் கூட்டம் என்பனவற்றைப் பயன்படுத்தி பற்றுச்சீட்டு எழுதி வழங்காமல் பணம் அறவிடப்படுவதாகவும் கிளை முகாமையாளர்கள் தமது விருப்பத்திற்கு ஏற்ப பொருள்களை விற்பனை செய்வதாகவும் கவலை தெரிவிக்கப்படுகின்றது.

யாழ். மாவட்ட செயலகம் மூலம் விநியோகிக்கப்படும் பொருள்களின் விலை பலநோக்கு கூட்டுறவுச் சங்கக் கிளை முகாமையாளர்களுக்கு அறிவிக்கப்பட்டபோதிலும் அதனைப் பொதுமக்களுக்குத் தெரியக்கூடியதாக பலநோக்குக் கூட்டறவுச் சங்க கிளையில் பகிரங்கப்படுத்தப்படவில்லை என்றும் கூறப்படுகின்றது.

பங்கீட்டு பொருள்களை பொதுமக்களுக்கு விநியோகிப்பதில் விலை அதிகரிப்பு அளவு குறைப்பு செய்வதோடு கிளை நிலையங்களில் இருப்பில் இருக்கின்ற பாவனைப் பொருள்களை நாளாந்தம் திட்டம் போட்டு அப்புறப்படுத்தி சில கிளை முகாமையாளர் தனியார் வியாபார நிலையங்களுக்கும் நண்பர்கள் உறவினர்களுக்கும் விற்பனை செய்வதாகக் கூறப்படுகின்றது.

## காணாமற்போனோர் தொடர்பான முறைப்பாடுகள்

யாழ்ப்பாணம்.செப்.10

கோப்பாயைச் சேர்ந்த இரு இளைஞர்கள் வெள்ளைவானில் வந்தவர்களினால் ஊரடங்கு நேரத்தில் கடத்திச் செல்லப்பட்டுள்ளனர் என்று மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் அவர்களது உறவினர்களால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு கடத்திச் செல்லப்பட்டவர்கள் கோப்பாய் பழைய வீதியைச் சேர்ந்த சுந்தரம் திலீபன் (வயது 23) மற்றும் கோப்பாய் தெற்கைச் சேர்ந்த குகதாசன் கிஷோக்குமார் (வயது 22) ஆகியோர் என முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேநேரம் நேற்றுமுன்தினம் ஆனைக்கோட்டை பொன்னப்பா வீதியில் சுடப்பட்டு மரணம் அடைந்த அளவெட்டியைச் சேர்ந்த மயூரன் என்பவரும் குறிப்பிட்ட இளைஞர்கள் இருவரும் கடத்தப்பட்ட நாளில் கடத்தப்பட்டதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (68-79)

* * *

பட்டினசபை வீதி, சங்கானையைச் சேர்ந்த வேலன் சிவலிங்கம் சந்திரகுமார் (வயது 23) என்பவர் [illegible] யளவில் அவரது வீட்டில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார் என்று அவரது தந்தையார் மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளார்.

வெள்ளை வானில் வீட்டுக்கு வந்த ஆயுதபாணிகள் வீட்டில் உள்ளோரைத் தாக்கியதுடன் ஆகாயத்தை நோக்கி வேட்டுக்களைத் தீர்த்தனர் என்றும் முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## வேலணை ப.நோ.கூ.ச மண்ணெண்ணெய் விநியோகம்

யாழ்ப்பாணம்.செப்.10

வேலணை பிரதேச செயலகம் மற்றும் பிரதேச சபை அலுவலர்களுக்கு வேலணை ப.நோ.கூ.சங்கம் மூன்று லீற்றர் வீதம் மண்ணெண்ணெய் வழங்கியுள்ளது.

இதேவேளை - அப்பகுதியில் நிரந்தரமாக வசிக்கும் குடும்பங்களுக்கும் தலா மூன்று லீற்றர் வீதம் பங்கீட்டு அட்டைக்கு வழங்கப்பட்டுவருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (ப-95)

## வல்வெட்டித்துறை நேற்று சுற்றிவளைப்பு

யாழ்ப்பாணம்.செப்.10

வல்வெட்டி, வல்வெட்டித்துறை ஆகிய பகுதிகள் நேற்று படையினரால் சுற்றிவளைக்கப்பட்டு தேடுதலுக்கு உட்படுத்தப்பட்டன.

வீடு வீடாகச் சென்ற படையினர் பொதுமக்கள் அனைவரையும் வல்வெட்டித்துறை பஸ் நிலையத்துக்கு அழைத்து வந்தனர் என்றும் -

அங்கு நடத்தப்பட்ட விசாரணைகளை அடுத்து பொதுமக்கள் வீடுகளுக்குச் செல்ல அனுமதிக்கப்பட்டனர் என்றும் - கூறப்பட்டது.

எனினும் எவரும் கைதுசெய்யப்பட்டதாகத் தகவல் இல்லை. (15)

## மினி முகாம் அமைப்பு

கரவெட்டி.செப்.10

பருத்தித்துறை வட இந்துமகளிர் கல்லூரிக்கு பின்புறமாக சீருடையினர் மினி முகாம் ஒன்றை அமைத்துள்ளனர்.

இந்த மினிமுகாமில் மண்மூடைகள் அடுக்கப்பட்டு காவலரண் நிறுவப்பட்டுள்ளன என்றும் கூறப்பட்டது. இந்த மினிமுகாம் பாடசாலை மாணவர்களுக்கும் பொது மக்களுக்கும் பெரும் அச்சத்தைக் கொடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (70)

## ஆயுள்வேத டாக்டர்களுக்கான மேலதிக கொடுப்பனவுகள்

யாழ்ப்பாணம்.செப்.10

உள்ளூராட்சி சபைகளில் கடமையாற்றும் ஆயுள்வேத டாக்டர்களுக்கு மஹிந்த சிந்தனை மூலம் வழங்கப்படவேண்டிய மேலதிக கொடுப்பனவு வழங்கப்படவில்லையென விசனம் தெரிவித்துள்ளனர்.

குடாநாட்டில் உள்ள சில உள்ளூராட்சி சபைகளில் கடமையாற்றும் ஆயுள்வேத டாக்டர்களுக்கு மஹிந்த சிந்தனை மூலமான மேலதிக கொடுப்பனவு வழங்கப்பட்டபோதும் -

குறிப்பிட்ட சில உள்ளூராட்சி சபைகளில் இக்கொடுப்பனவு வழங்கப்படாதுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (95)

## வேலணை மத்தியஸ்தர்சபை மீண்டும் வழமைபோல் இயங்கும்

மண்டைதீவு.செப்.10

வேலணை பிரதேச செயலகத்தின் அதிகார எல்லைப் பரப்பிற்குட்பட்ட பிணக்குகளுக்கான தீர்வு நடவடிக்கைகளை மீண்டும் வேலணை மத்தியஸ்தர் சபை ஆரம்பிக்க இருப்பதாக சபையின் தவிசாளர் எஸ்.கே. சண்முகலிங்கம் அறிவித்துள்ளார்.

நாளை 10ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையில் இருந்து சபைக்கூட்டம் வழமைபோல் ஞாயிற்றுக்கிழமை தோறும் நடைபெறும்.

கடந்த மாதம் 11ம் திகதியின் பின் மத்தியஸ்தர் சபை, கூடவோ,விசாரணைகளை மேற்கொள்ளவோ இயலாதிருந்ததென்பது குறிப்பிடத்தக்கதாகும். (ப-88)

## எழுதுமட்டுவாழ் தெற்கு மக்களுக்கான நிவாரணம் வழங்குவது நிறுத்தம்

தென்மராட்சி.செப்.10

எழுதுமட்டுவாழ் தெற்கு,கரம்பகம், ஒட்டுவெளி ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளிலிருந்து இடம்பெயர்ந்துள்ள மக்களுக்கான நிவாரணப் பொருள்கள் வழங்குவது தென்மராட்சி பிரதேச செயலகத்தினால் நிறுத்தப்பட்டுள்ளது.

இடம்பெயர்ந்துள்ள மக்கள் தற்போது வசிக்கும் பிரிவுகளிலேயே பதிவுசெய்து நிவாரணப் பொருள்களைப் பெற்றுக் கொள்ளுமாறு கடந்த ஏப்ரல் மாதம் பிரதேச செயலகத்தினால் அறிவிக்கப்பட்டிருந்தது.

இதன் பிரகாரம்,மேற்படி பிரிவு மக்களுக்கான நிவாரணம் வழங்குவது நிறுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (117)

## ஆள்களற்ற வீடுகளில் பொருள்கள் திருட்டு

தென்மராட்சி கிழக்கு.செப்.10

வரணிப் பிரதேசத்தில் இடைக்குறிச்சி, வரணி வடக்கு ஆகிய பிரதேசங்களில் உள்ள ஆள்களற்ற வீடுகளில் உள்ள பொருள்கள் திருடப்பட்டுள்ளன என்று அப்பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளார்.

கடந்த மாதம் 10ஆம் திகதி மேற்படி பகுதிகளில் இடம்பெற்ற அசாதாரண சூழ்நிலையை அடுத்து பிரதேச மக்கள் முழுமையாக இடம்பெயர்ந்துவிட்டனர்.

ஊரடங்கு தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தப்படுவதாலும் மக்கள் வீடுகளை விட்டு இடம்பெயர்வதாலும் வீடுகளில் இருந்த பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டுள்ளன என்று கூறப்பட்டது. (122)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி, தொலைநகல் - 222 9944, 222 9933, 222 3837

# தமிழினத்திற்கு நீதி செய்யுமா இணைத் தலைமை நாடுகள்

மாவிலாறு, சம்பூர் வெற்றிகள் தந்த உற்சாகத்தில் கொக்கரிக்கின்றது தென்னிலங்கை.

யுத்த நிறுத்த காலத்தில் இருதரப்பு எல்லைப்புறங்களில் நடக்கும் யுத்த நடவடிக்கைகளின் பெறுபேறுகள் சிங்களத்தைத் துள்ளிக்குதிக்க வைக்கின்றன.

விடுதலைப் புலிகளின் மைய நிலமான வன்னிப் பெரு நிலப்பரப்புடன் தரைவழி விநியோகத் தொடர்பற்ற பிரதேசத்தில் -

அதுவும், கடல் வழி விநியோகப் பாதையையும் யுத்த நிறுத்த ஒப்பந்தம் கட்டுப்படுத்தியிருக்கின்ற இந்தக் காலகட்டத்தில் -

மாவிலாறு, சம்பூர் வெற்றிகளை பெரும் சாதனைகளாகக் கொண்டாடுகிறது இலங்கை அரசு.

நல்லது. போர் நிறுத்த காலத்தின் சிறு சிறு வெற்றிகள் இனிப்பானவையாகவும், மகிழ்ச்சி தருவனவாகவும் இருக்கலாம். ஆனால், அதன் விளைவாக போர்நிறுத்தம் செயலிழக்கும் போது அதன் தொடராக இடம்பெறப்போகும் சம்பவங்கள் இடியாக இறங்கக்கூடும்.

இந்த நெருக்கடியான காலகட்டத்தில் இலங்கைக்கு உதவும் நாடுகளின் இணைத்தலைமை நாடுகள் நாளை பிரஸல்ஸில் கூடவிருப்பது முக்கிய அம்சமாகும்.

இந்தச்சூழலில் இலங்கையின் பிரதமரும் பிரதிப்பாதுகாப்பு அமைச்சருமான ரட்ணசிறி விக்கிரமநாயக்கா தற்போதைய நிலைமை குறித்து தென்னிலங்கையின் கருத்துக்கள் நோக்கற்பாலவை.

*"விடுதலைப் புலிகளின் வசமுள்ள பகுதிகளை இன்னும் இன்னும் கைப்பற்றுவோமே தவிர, அரச படைகளினால் மீட்கப்பட்ட இடங்களிலிருந்து ஓர் அங்குலத்தைக் கூட விட்டுக்கொடுக்கமாட்டோம். விட்டுக்கொடுக்கும் பழக்கம் எங்களிடம் இல்லை."* - என்று சூழுரைத்திருக்கின்றார் இலங்கையின் பிரதமர்.

ஆக, தாம் ஆக்கிரமத்துக் கைப்பற்றிய சம்பூர் மற்றும் மாவிலாற்றுப் பகுதிகளை விட்டு விலகப்போவதில்லை என்பதை அத்தரப்பு திட்டவட்டமாகவும் ஐயத்துக்கிடமின்றியும் தெளிவுபடுத்திவிட்டது.

யுத்த நிறுத்த ஒப்பந்தம் நடைமுறையில் இருக்கையில் இவ்வாறு ஒரு தரப்பின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தை மறுதரப்பு இராணுவ நடவடிக்கை மூலம் ஆக்கிரமித்து, கைப்பற்றித் தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பது என்பது பெரும் யுத்த நிறுத்த மீறலாகும். அது மாத்திரமல்ல யுத்த நிறுத்த உடன்பாட்டையே முறித்துச் செயலிழக்கச் செய்யும் மோசமான - மிகமோசமான செயற்பாடு அது. போரை முழு அளவில் வெடிக்கச்செய்யும் இந்த ஆக்கிரமிப்பு நடவடிக்கை அமைதி முயற்சிகளுக்கு நிரந்தரமாகவே தாழ்ப்பாழ் போட்டு விடக்கூடிய அம்சமாகும்.

அமெரிக்கா, ஜப்பான், நோர்வே, ஐரோப்பிய ஒன்றியம் ஆகியன அடங்கலான இணைத்தலைமை நாடுகள், இலங்கை விவகாரம் குறித்து அவ்வப்போது கூடிக்கலந்தாலோசனை செய்த பின்னர் விடுக்கின்ற வழமையான அறிக்கைகளில் ஒரு விடயத்தைத் திரும்பத் திரும்ப அவை சுட்டிக்காட்டுவது கவனிக்கத்தக்கது.

அது - சம்பந்தப்பட்ட இரு தரப்புக்களும் (இலங்கை அரசும் விடுதலைப் புலிகள் இயக்கமும்) யுத்த நிறுத்த உடன்பாட்டை முழு அளவில் மதித்து செம்மையாக நடைமுறைப்படுத்த ஒத்துழைப்பதோடு அமைதி முயற்சிகளில் ஆக்கபூர்வமாக ஈடுபட்டு இணக்கத் தீர்வு காண்பதற்கு முன்வரவேண்டும் என்பதே.

அவ்வாறு இணைத்தலைமைகள் உட்பட சர்வதேச சமூகமுமே ஒரே குரலில் வலியுறுத்தி வருகையில் -

யுத்த நிறுத்த உடன்பாட்டை முற்றாகச் சீர்குலைக்கும் விதத்தில், அதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் அடிப்படை நோக்கங்களையே சிதறடிக்கும் வகையில், பெரும் ஆக்கிரமிப்பு இராணுவ நடவடிக்கை ஒன்றை யுத்த நிறுத்த காலத்தில் நடத்தி, பிரதேசத்தைக் கைப்பற்றி, அதைத் தொடர்ந்து தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்கப் போவதாக இலங்கை அரசு பகிரங்கமாகவும், வெளிப்படையாகவும் கொக்கரித்து நிற்கின்றது.

இந்நடவடிக்கை இணைத்தலைமை நாடுகள் தொடர்ந்து வலியுறுத்திவரும் நிலைப்பாட்டுக்கு முற்றிலும் முரணானது மட்டுமல்லாமல், இணைத்தலைமைகள் முன்வைக்கும் வாதத்தின் நியாயத்தையே முற்றிலுமாக சிதைத்து சீர்குலைப்பதுமாகும்.

அரசுத்தரப்பின் இந்த ஆக்கிரமிப்புப் போக்கினால் முழு அளவிலான யுத்தம் மூளுவதற்கான விளிம்புக்கு இலங்கைத்தீர்வு தள்ளப்பட்டுவிட்டது என்பது கண்கூடு.

இச்சூழலில் நாளை கூடவிருக்கும் இணைத்தலைமைகள் இவ்விவகாரத்தில் எப்படிச் செயற்படப்போகின்றன என்பதே கேள்வி; முழு உலகமுமே - சர்வதேச சமூகமுமே - அவற்றின் பிரதிபலிப்பை எதிர்பார்த்துக் காத்துநிற்கின்றது.

வழமைபோல -

ஒரு நாடு என்ற முறையில் (State factor) இலங்கை அரசுக்கு தனியிடம் கொடுத்து, அதை அரவணைக்கும் விதத்திலும், புலிகளை நாடு அல்லாத (Non state factor) பயங்கரவாத இயக்கமாகக் கருதி அதைத் கண்டிக்கும், தண்டிக்கும் வகையிலும் இனிமேலும் பக்கச்சார்பாக நடந்து கொண்டு நாட்டில் முழு யுத்தம் மீள மூளுவதற்கு கால்கோள் இட்டு குழப்பப் போகின்றதா?

அல்லது -

அரசு, புலிகள் ஆகிய இரு தரப்புக்களையும் சம தரப்புகளாகக் கணித்து, அதனடிப்படையில் உருவாக்கப்பட்ட யுத்த நிறுத்த விதிகளைக் கவனத்தில் கொண்டு இவ்விவகாரத்தில் இன்றைய நிகழ்வுப் போக்குகளை சிரத்தையில் எடுத்து, நீதி, நியாயமான நிலைப்பாட்டை இணைத்தலைமைகைக்கொண்டு அதைப் பகிரங்கப்படுத்தப் போகின்றதா?

நீதி நிலைநாட்டப்படுவது மாத்திரம் அல்ல, அது நிலைநாட்டப்படுவது போல காட்டப்படவும் வேண்டும். - என்பர். (Justice not only be done, but also appear to be done)

தான் நீதியாக நடந்து கொள்வதை இணைத்தலைமைகள் வெளிப்படுத்த உகந்த பரீட்சைக்களம் அவற்றின் நாளைய கூட்டமாகும்.

முழுத்தமிழினமும் இணைத்தலைமைகளின் நீதியான நிலைப்பாட்டை எதிர்பார்த்துக் காத்திருக்கின்றது.

# இவ்வருடம் ஜனவரி முதல் ஜூன் வரை இலங்கை முழுவதிலும் 863 கொலைகள்

## பொலிஸ் தலைமையகம் தகவல்

கொழும்பு, செப். 10

இந்த வருடத்தின் முதல் ஆறு மாத காலத்தில் (ஜனவரி முதல் ஜூன் வரை) நாட்டில் 863 கொலைச் சம்பவங்கள் இடம்பெற்றிருப்பதாக பொலிஸ் தலைமையகம் தெரிவிக்கின்றது.

இதனைத் தவிர, 994 வாகனக் கொள்ளைச் சம்பவங்களும், 1964 வீடுடைப்புச் சம்பவங்களும், 815 உடைமை கொள்ளைச் சம்பவங்களும் இந்தக் காலப்பகுதிக்குள் இடம்பெற்றுள்ளன. இதேபோல், 922 வலலுறவுச் சம்பவங்களும் இடம்பெற்றுள்ளதாக பொலிஸ் தலைமையக அறிக்கையொன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கொலைச் சம்பவங்களைப் பொறுத்த வரை, கடந்த ஜனவரியில் 627, பெப்ரவரியில் 80, மார்ச்சில் 90, ஏப்ரலில் 204, மே மாதத்தில் 198, ஜூன் மாதத்தில் 164 சம்பவங்கள் பதியப்பட்டுள்ளன. கூடுதலான கொலைச் சம்பவங்கள் வடக்கு - கிழக்கிலேயே இடம்பெற்றுள்ளன.

வாகனக் கடத்தல்கள் மற்றும் கொள்ளைச் சம்பவங்கள் என்பன மேல் மாகாணத்திலேயே கூடுதலாக இடம்பெற்றுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது. (த)

# நெதர்லாந்து அரசு ஒரு மில்லியன் யூரோ உதவி

கொழும்பு, செப். 10

இலங்கையின் வடக்கு - கிழக்கில் இடம்பெயர்ந்துள்ள மக்களுக்கு நெதர்லாந்து அரசு ஒரு மில்லியன் யூரோவை ஒதுக்கீடு செய்துள்ளது.

இந்த நிதி ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகள் அமைப்பின் ஊடாக வழங்கப்படும் என்று அந்த நாட்டு அரசு அறிவித்துள்ளது. (த)

# ஏ – 9 வீதி மூடப்பட்டுள்ளதால் சுனாமி நிவாரணப்பணி பாதிப்பு

## ஆஸ்திரேலிய செஞ்சிலுவைச் சங்கம் கவலை

ஆஸ்திரேலியா, செப்.10

இலங்கையின் வடக்கு – கிழக்குப் பிரதேசங்களில் தற்போது இடம்பெற்று வரும் யுத்தசூழ்நிலை காரணமாக யாழ்ப்பணம் – முகமாலையூடான ஏ – 9 தரைவழிப்பாதை மூடப்பட்டுள்ளது. இதனால் ஆழிப்பேரலை அனர்த்தம் தொடர்பான தங்களுடைய வேலைத்திட்டங்கள் யாவும் முழுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன என்று ஆஸ்திரேலிய செஞ்சிலுவைச் சங்கம் கவலை தெரிவித்துள்ளது.

"யாழ். நகருக்கான பிரதான தரை வழிப்பாதையான ஏ – 9 பாதையைத் திறக்க விடுதலைப்புலிகள் சம்மதம் தெரிவித்துள்ளபோதிலும், அரசு இன்னும் சம்மதம் தெரிவிக்கவில்லை.

இதனால், எமது ஆழிப்பேரலை சம்பந்தமான அபிவிருத்திப்பணிகளை எம்மால் தொடர்ந்து மேற்கொள்ளமுடியாத சூழ்நிலை ஏற்பட்டிருக்கின்றன" என்று ஆஸ்திரேலிய செஞ்சிலுவைச் சங்க அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (த)

# இரவுநேர மின்தடை மக்கள் படும் சிரமம்

இரவு வேளைகளில் மின்சாரம் வெகு நேரம் தடைப்படுவதால் மக்கள் பாதிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கை மின்சார சபை கடந்த சில நாள்களுக்கு முன் மின்சாரம் தடைப்படும் நேரங்கள் பற்றி ஊடகங்கள் வாயிலாக மக்களுக்குத் தெரியப்படுத்தியிருந்த போதிலும் மேற்படி நேரங்களிலும் மின்சாரம் தடைப்படுவதால் - குறிப்பாக இரவுவேளைகளில் முற்றாகத் தடைப்படுவதால் மக்கள் தமது அன்றாடக் கடமைகளைச் செய்வதற்குப் பெரிதும் சிரமப்படுகின்றனர்.

அதேவேளை பகல்வேளைகளில் மின்சாரம் தடைப்படும் நேரங்களில் அரச அலுவலகங்களின் பணிகள் கூடத் தடைப்படுகின்றன. குறிப்பாகக் கணனி ஊடாகச் செய்யப்படும் வேலைகள் பெருமளவு மந்த கதியிலேயே செயற்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (79)

# புங்குடுதீவில் ஒரு கலன் தண்ணீர் ஒரு ரூபாய் வீதம் விநியோகம்

மண்டைதீவு.செப்.10

புங்குடுதீவில் ஒரு கலன் குடிதண்ணீர் ஒரு ரூபாவிற்கு விநியோகம் செய்யப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. புங்குடுதீவுப் பகுதியில் கடும் வரட்சி நிலவுவதால் குடிதண்ணீருக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக புங்குடுதீவு - நயினாதீவு கூட்டுறவுச்சங்கத்தினர் சாட்டிப்பகுதியில் இருந்து பௌசர்கள் மூலம் குடிதண்ணீரை எடுத்து வந்து மக்களுக்கு வழங்கி வருகின்றனர்.

பௌசருக்கு ஏற்படும் செலவை ஈடு செய்வதற்காகவே ஒரு கலன் தண்ணீருக்கு ஒரு ரூபா வீதம் அறவிடப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (88-203)

# பெறுபேறு வெளியிடுவதில் தாமதம் ஏற்படக் காரணம்

யாழ். குடாநாட்டில் நிலவும் அசாதாரண சூழ்நிலை காரணமாகக் கடந்த ஏப்ரல் மாதம் நடைபெற்று முடிந்த ஜீ.சி.ஈ. உயர்தரப் பரீட்சையின் செய்முறைப் பரீட்சைகளை உரிய நேரத்தில் நடத்தி முடிக்க இயலாது போயுள்ளது.

இதன் காரணமாகவே பரீட்சைப் பெறுபேறுகளை வெளியிடுவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது என்று கல்வித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.(ப-203)

# இடம்பெயர்ந்துள்ள வாகன உரிமையாளர் எரிபொருள் அட்டை பெறுவதில் சிக்கல்

யாழ்ப்பாணம்,செப்.10

நெடுந்தீவு-நயினாதீவு உட்பட தீவுப் பகுதியில் உள்ள பலர் தமது குடும்பத்தினர் சகிதம் தற்சமயம் யாழ்ப்பாணப் பகுதிகளில் வசித்து வருகின்றனர்.

தமது வாகனங்களுக்கான எரிபொருள் விநியோக அட்டைகளைப் பெற்றுக்கொள்வதில் பலத்த சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளதாக அவர்கள் தெரிவிக்கின்றனர்.

தமது சொந்த இடங்களிலேயே வாகனப் பதிவுகள் இருப்பதினால் தம்மால் எரிபொருள் விநியோக அட்டையைத் தற்சமயம் தாங்கள் வதியும் பிரதேசங்களில் பெற்றுக்கொள்ள முடியாதிருப்பதாகவும்-

யாழ். நகரில் தமது பகுதிகளில் எரிபொருளைப் பெறவேண்டுமானால் வாகனப் பதிவுப் புத்தகங்களை மாற்ற வேண்டும் எனக் கூறப்படுவதாக வும்-

யாழ்ப்பாணப் பகுதிகளில் வசிக்கும் இந்தவித வாகன உரிமையாளர்களுக்கு அந்தந்தப் பகுதிகளில் எரிபொருள் விநியோக அட்டைகளை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும்-அவர்கள் கோருகின்றனர். (ப-111)

## இந்தியத் தூதரை விமர்சித்த

# அநுராவின் பேச்சு அர்த்தமற்றது சம்பந்தன் எம்.பி. கடும் சாடல்!

இலங்கைக்கான இந்தியத் தூதுவர் நிருபமாராவை விமர்சித்துள்ள அமைச்சர் அநுரா பண்டாரநாயக்கவுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற குழுத்தலைவர் இரா. சம்பந்தன் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் கூறியுள்ளதாவது:-

இலங்கை விவகாரத்தில் இந்தியா எப்படிச் செயற்படவேண்டும் என்ற அநுராவின் புத்திமதி இந்தியாவுக்குத் தேவைப்படாது. உரியவிதத்தில் இந்தியா, இலங்கைப் பிரச்சினையை அணுகுகிறது.

அநுராவின் பேச்சு அர்த்தமற்றதாகும். இலங்கையின் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண இந்தியாவின் உதவி அவசியமானதாகும். அது அனைவராலும் ஏற்கப்பட்டதுதான். இந்தியாவை அநுரா விமர்சித்துள்ளமையை ஏற்க முடியாது.

இந்தியாவுக்குப் பாடம் புகட்ட அநுரா முயலக்கூடாது. இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் இந்தியாவை ஓரம்கட்டக் கூடாது. இந்தியாவின் உதவியைப் பெற அனைத்துத் தரப்பினரும் முன்வரவேண்டும் - என்றார் இரா. சம்பந்தன். (த)

# எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக பெரும்போகம் பாதிக்கப்படும் நிலை

யாழ்ப்பாணம்,செப்.10

பெரும்போக விதைப்புக்குரிய காலம் வந்தும் உழவு இயந்திரங்களுக்கான டீசல் எரிபொருள் பற்றாக்குறையினால் நெல் விதைப்பு பாதிப்பு அடையும் அபாயம் தோன்றியுள்ளது.

வலி.தென் மேற்கில் கடந்த மூன்று நாள்கள் பெய்த மழையைத் தொடர்ந்து விவசாயிகள் குப்பைகள் பரவி உழவுக்குத் தயாராக இருந்தபோதும் உழவு இயந்திரங்களுக்கு வழங்கப்படும் டீசல் பற்றாக்குறையாக உள்ளது.

அத்துடன் வெளிச்சந்தைகளில் தாராளமாக டீசல் இருந்தபோதும் விலை பலமடங்கு ஏறியிருப்பதால் உழவு இயந்திர உரிமையாளர் கொள்வனவு செய்து உழவுக்குப் பயன்படுத்த பின்னடிக்கின்றனர்.

கடந்த காலங்களில் ஒரு பரப்பு வயல் உழவு செய்து மறுப்பு செய்ய 45 ரூபாவாகவும் இவ்வாண்டு உழவு செய்து மறுப்பு செய்ய 65 ரூபா பெற்றுக் கொள்வதாகவும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை-

பழைய முறைப்படி மாடுகளைக் கொண்டு உழவு செய்வதற்கு விவசாயிகள் முயன்று வருகின்றனர். (ப-95)

# சமாதானம்வேண்டி பூசை வழிபாடு

யாழ்ப்பாணம்,செப்.10

சாந்தி சமாதானம் வேண்டி இன்று ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு விசேட பூசை வழிபாடுகள் நவாலி களையோடை கண்ணகை அம்மன் ஆலயத்தில் ஆலய பிரதம குரு கந்தையா நாகேந்திரம் தலைமையில் நடைபெறவிருக்கின்றன.

நவாலி ஹேமலதா செல்வராஜா ஞாபகார்த்த நிறுவன ஏற்பாட்டில் மேற்படி சிறப்புப்பூசை வழிபாடும் அமைதிவேண்டிப் பிரார்த்தனையும் இடம்பெறும்.(95)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஞானக்குழந்தை கல்விக் கழகம்

சிவன் வீதி, திருநெல்வேலி.

ஆசிரியர் வே.அன்பழகனின்

தரம் 5 புலமைப் பரிசில் 2006 மாணவர்களுக்கான மீட்டல் வகுப்பு இன்று காலை 10.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

தரம் 1 தொடக்கம் தரம் 4 வரை சகல வகுப்புகளும் ஆரம்பமாகியுள்ளது.

(53623) - இயக்குநர்.

## குளிரூட்டிய நவீன CAR வாடகைக்கு

★ திருமணம் (அலங்காரத்துடன்)
★ சுற்றுலா ★ விசேட வைபவங்கள்

போன்ற அனைத்து தேவைகளுக்கும் ஆங்கில இலக்கம் கொண்ட நவீன கார் சாரதியுடன் நியாயமான விலையில் உயர்ந்த சேவையுடன் பெற்றுக்கொள்ளலாம். (48465) (24)



தொடர்பு: ரட்ணம்
சோமசுந்தரம் மாலர் பாடசாலை
22, சோமசுந்தரம் அவனியூ, சுண்டிக்குழி, யாழ்ப்பாணம்

T.P.: 0777-903090
0777 246117

## இடமாற்ற அறிவித்தல்

LEADS லீட்ஸ் இடீஸ்

லீட்ஸ் நிறுவனமானது இல.80, பலாலி வீதி, திருநெல்வேலியில் இருந்து 11-09-2006 தொடக்கம் இல.24 ஆசீர்வாதம் வீதி, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணத்தில் இயங்கவுள்ளது என்பதை சகலருக்கும் அறியத்தருகின்றோம்.

தொடர்பு இல:-
0773187655
021 222 7923

(53586) -நிர்வாகம்.


## 12 தமிழ் இளைஞர்கள் கண்டி நகரில் கைது

கண்டி, செப்.10

கண்டி நகரில் நேற்று முன்தினம் 12 தமிழ் இளைஞர்கள் சந்தேகத்தின்பேரில் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டிருக்கின்றனர். கைதுசெய்யப்பட்ட இளைஞர்கள் மட்டக்களப்பு, திருகோணமலை, வவுனியா, நுவரெலியா போன்ற பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

இவர்களில் சிலரிடம் தகுந்த அடையாள அட்டைகள் இருக்கவில்லையென்று பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸார் இளைஞரிடம் விசாரணைகளை மேற்கொண்டபோது தொழில் நிமித்தம் தாம் கண்டி நகருக்கு வந்தனர் என அவர்கள் தெரிவித்தனர். பொலிஸார் தொடர்ந்தும் விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.

(த)

உ
சிவமயம்

## ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரி-புத்தூர்
## நிறுவுநர் நாள் - 2006

தோற்றம்
10 - 09 - 1887



மறைவு
15 - 05 - 1936

### அமரர் மழவராயர் கந்தையா வள்ளல்

**நிறுவுநரின் திருத்தொண்டுகளுட் சில.......**

* சைவச் சூழலில் ஆங்கில மொழிமூலக் கல்வியை வழங்கவென 1931இல் எங்கள் பள்ளியை நிறுவியமை.
* புத்தூர் விசுவநாதப் பெருமான் கோயில் (புத்தூர் சிவன்) நிறுவியமை.
* பசிப்பிணி போக்கும் அன்னசத்திரம் நிறுவியமை.
* நல்லூரில் திருஞானசம்பந்தர் ஆதீனம் அமைய வேண்டி கதிர்வேலாயுத சுவாமி மடாலயத்துடன் கூடிய நிலத்தை வழங்கியமை.

அன்னவரின் 119ஆவது பிறந்த நாள் நிகழ்வுகள் இன்று [10.09.2006] ஞாயிற்றுக்கிழமை மு.ப. 9.30 மணிக்கு புத்தூர் சிவன் கோயிலில் இடம் பெற்றுத் தொடர்ந்து நிகழ்வுகள் கல்லூரிப் பிரதான மண்டபத்தில் இடம்பெறும்.

ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரி, புத்தூர். (53578) அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், கல்விசாரா அலுவலர், பவளவிழாச் சபை.

## ஆயிரமாண்டு அபிவிருத்தி இலக்குகள் (MDGs) மற்றும் அதற்கப்பால் அடைவதை நோக்கி...

keep the promise 2015
Millennium Development Goals

### MDGs மற்றும் அதற்கப்பால் அடைவதை நோக்கியதான பல் பங்குதாரர் ஆலோசனை மற்றும் தேசிய முன்னெடுப்பு...

* சம்பந்தப்பட்ட அமைச்சுகள், ஐக்கிய நாடுகள் முகவர் நிறுவனங்கள், நிதி வழங்குனர்கள் மற்றும் மக்கள் சமூகத்தை உள்ளடக்கிய உயர் மட்ட உள்ளக அமைச்சரவை MDG பிரிவு NCEDஇன் கீழ் நியமிக்கப்பட்டது - நவம்பர் 2004
* முதலாவது MDG நாட்டு அறிக்கை தயாரிக்கப்பட்டு ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் கோபி அனானுக்கு கையளிக்கப்பட்டதுடன், பல்வழி மற்றும் இருவழி நிதி வழங்குனர்களின் முன்னிலையில், இலங்கையின் கண்டியில் நடைபெற்ற இலங்கையின் முதலாவது அபிவிருத்தி அமர்வில் அறிமுகப்படுத்தப்பட்டது - மே 2005
* MDG அடிப்படையாகக் கொண்ட வறுமைக்கெதிரான வளர்ச்சி தந்திரோபாயங்கள் மற்றும் செயற்பாட்டு நடவடிக்கைகள், விவசாய பிரிவு, கல்விப் பிரிவு, சுகாதாரப் பிரிவு, கிராமிய அபிவிருத்திப் பிரிவு, திறமைகள் அபிவிருத்திப் பிரிவு, ஏற்றுமதிப் பிரிவு, SME பிரிவு, தோட்டத்துறைப் பிரிவு மற்றும் மீள்புதுப்பிக்கக்கூடிய சக்தி பிரிவு "Time Bound Delivery" ஆகிய பங்குதாரர்களின் பங்களிப்புடன் NCEDஇனால் தயாரிக்கப்பட்டு அமுல்படுத்தப்பட்டுள்ளது - நவம்பர் 2005
* புதிய ஜனாதிபதியின் பதவிக்காலத்தில் நாட்டின் சகல பாகங்களிலும் MDGsஐ அடைய அர்ப்பணிப்புடன், தொடர்ச்சியாக 2005 மற்றும் 2006ஆம் ஆண்டுகளில் MDG அடிப்படையாகக் கொண்ட தேசிய வரவு செலவுத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டன - டிசம்பர் 2005
* உயர் மட்ட கொள்கை திட்டமிடல் மற்றும் அதிமேதகு ஜனாதிபதியின் அபிவிருத்தி நோக்கான 'மஹிந்தவின் சிந்தனையில்' MDGகள் கண்டறியப்பட்டு இணைக்கப்பட்டுள்ளன - ஜனவரி 2006




* வறுமை ஆள் எண்ணிக்கை குறியீட்டின் அடிப்படையில், நேரடியாக MDGகளை அமுல்படுத்தும் விதத்தில் தேசிய வரவு செலவுத் திட்ட ஒதுக்கமான ரூ. 46 பில்லியனுடன் வறுமைக்கெதிரான நிகழ்ச்சித்திட்டத்தை (PPPs) முன்னெடுக்க 119 பிரதேச செயலக பிரிவுகள் (DSDs) இனங்காணப்பட்டுள்ளன - ஏப்ரல் 2006
* அரசாங்கத்தின் சேவை வழங்கற் பிரிவுகளின் அளவையும் திறமையையும் மேம்படுத்த, அதிமேதகு ஜனாதிபதியினால் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை பத்திரம் மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது - ஜூன் 2006
* 12,000இற்கும் அதிகமான கிராம சேவையாளர் பிரிவுகளில் (GNDs) MDGகளை நோக்கியதான நாட்டின் அடைவின் முன்னேற்றங்களை கண்காணிக்க, புள்ளிவிபர மற்றும் மதிப்பீட்டு திணைக்களத்தால் MDG சுட்டிகளின் தேசிய தரவுத்தளம் அறிமுகப்படுத்தப்பட்டது - ஜூலை 2006
* கெமிதிரிய (550 பின் தங்கிய கிராம அபிவிருத்தி), மகனெகும (கிராமிய உட்கட்டமைப்பு அபிவிருத்தி), தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி மற்றும் சமூக நலன், யொவுன் திரிய, சமூக நீர்வழங்கல், தாய்மார் மற்றும் சிறுவர்களுக்கான போஷாக்குணவு ஆகியவை உட்பட PPPs நாடுமுழுவதும் அமுல்படுத்தப்படுகின்றன.
* தெற்குக்கான பெருந்தெரு, வீரவிலவில் இரண்டாவது சர்வதேச விமான நிலையம், கொழும்பு - கட்டுநாயக்கா அதிவேக பாதை, அம்பாந்தோட்டையில் தெற்கு துறைமுகம், நுரைச்சோலையில் நிலக்கரி மின் நிலையம் உட்பட பல மாபெரும் உட்கட்டமைப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்துடன் (UNDP) இணைந்து பொருளாதார அபிவிருத்திக்கான தேசிய சபையில் உள்ள தேசிய MDG செயலகத்தின் செய்தி

NCED
NATIONAL COUNCIL FOR ECONOMIC DEVELOPMENT

### ஆயிரமாண்டு அபிவிருத்தி இலக்குகள்

● வறுமை மற்றும் பட்டினியை ஒழித்தல் ● உலகளாவிய ஆரம்பகட்ட கல்வியை அடைதல்
● பாலின சமத்துவத்தை ஊக்குவித்து பெண்களுக்கு அதிகாரமளித்தல் ● சிறுவர் இறப்புகளை குறைத்தல்
● கர்ப்பகால ஆரோக்கியத்தை மேம்படுத்தல் ● HIV/எயிட்ஸ், மலேரியா மற்றும் ஏனைய நோய்களுக்கெதிராக போராடுதல்
● ... அபிவிருத்திக்காக உலகளாவிய பங்காளித்துவத்தை உருவாக்கல்

UNDP

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முல்லைப் பள்ளி மாணவிகளின் படுகொலைகள் தமிழகத்தில் ஏற்படுத்தியுள்ள உணர்வலைகள்

வள்ளிபுன செஞ்சோலை வளாகத்தில் பள்ளிமாணவிகள் மீது அரசு விமானக்குண்டுகளை வீசிவிட்டு இலங்கைத்தீவு முழுவதிலும் உள்ள பாடசாலைகள் அனைத்தையும் இரண்டு வாரங்களுக்கு இழுத்து மூடிவிட்டது. வள்ளிபுனத்தில் 60இற்கும் மேற்பட்ட சிறுமிகளை படுகொலை செய்தமைக்கும் 130இற்கும் மேற்பட்ட சிறுமிகளைப் படுகாயப்படுத்தியமைக்குமான ஓர் ஒப்பு


முல்லைத்தீவில் இடம்பெற்ற விமானக்குண்டு வீச்சினால் அழிந்த பாடசாலைகளில் ஒன்று.

தல் வாக்குமூலமாகவே இரு வாரங்களுக்கும் பாடசாலைகள் அனைத்தையும் அரசு இழுத்து மூடிய விவகாரம் அமைந்தது.

வள்ளிபுனத்தில் படுகொலைக்கு ஆளான பள்ளிச்சிறுமிகளைப் பற்றி எனக்குத் தெரிந்த ஒரு சோகமான பக்கத்தை இங்கு

கள் படுகொலையைக் கண்டித்து தமிழக சட்ட சபையில் கட்சி வேறுபாடுகளை கடந்து கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டமை மிகவும் மகிழ்ச்சியளிக்கத்தக்க ஒரு நற் செய்தியாகும்.

தமிழக-தமிழீழ நல்லுறவு மிகவும் அத்தியாவசியமானது. தமிழீழ மக்களின் நலவாழ்விற்கும் உரிமைக்கும் தமிழக உறவுமிகவும் அடிப்படையானது. அவ்வாறே

தமிழகத்தின் நீண்ட எதிர்காலப் பாதுகாப்பிற்கும் தமிழீழ மண்ணும் மக்களும் மிகவும் அடிப்படையானவை. இவ்விரு தரப்பினது நலன்களையும் ஒரு தரப்பிலிருந்து இன்னொரு தரப்பென பிரித்துப் பார்க்க முடியாது. உலக யுத்தமொன்று வரின் தமிழீழ

வார்த்தது போல தனது பலமான ஆதரவை ஒரு மனதாய் வெளிப்படுத்தியது. இது இப்போதைக்கு ஒரு குறியீடுதான். ஆனால், அது வருங்காலத்திற்கான ஒரு கட்டியமும் ஆகும்.

தமிழீழ மக்களுக்கு வெளியுறவு என்றால் அது முதலாவதாக தமிழகம்தான். தமிழக - தமிழீழ உறவு நிரந்தரமானது. இதற்கு வெளியே யாரும் ஒரு போதும் அரசியலை சிந்திக்கமுடியாது. இலங்கைப் பொலிசாருக்கு தமிழகத்தில் பயிற்சியளிக்கும் விவகாரத்தை தமிழக அரசு தடுத்து நிறுத்தியதோடு, அவ்வாறு பயிற்சி பெற்று வந்த இலங்கைப் பொலிசாரை திருப்பி அனுப்பியதோடு குறிப்பிடக்கூடியளவு திருப்பம் ஏற்படத் தொடங்கியது. அது வள்ளிபுனம் சிறுமிகள் படுகொலையோடு அனைத்துக் கட்சிகளையும் தழுவிய ஒரு புதுக் குரலாய் வெளிப்பட்டது.

அப்பாவிப் பள்ளி மாணவிகளை தாம் படுகொலை செய்வதாகத் தெரிந்து கொண்டு அரசு இப்படுகொலையைச் செய்தமையாற்தான் உடனடியாக தீவடங்கிலுமுள்ள பாடசாலைகளை அரசு மூடியது. அப்பாவித் தமிழ் மாணவிகளை படுகொலை செய்ததற்குப் பதிலாகப் புலிகள் பழிவாங்கும் வகையில் சிங்கள மாணவிகளை கொல்வார்கள் என்ற அச்சத்தாற்தான் இவ்வாறு பாடசாலைகளை அரசு மூடியது. அப்பாவித் தமிழ் மாணவிகளை படுகொலை செய்ததற்குப் பதிலாய் அப்பாவிச் சிங்கள மாணவிகளை புலிகள் பழிவாங்குவார்கள் என்று நான் ஒருபோதும் நம்பவில்லை.

ளில் நிரூபித்துள்ளனர். அதற்குப் பெரும் படைப்பிரிவுகள் தேவையில்லை. செயற்றிறன் மிக்க சிறு அணிகள் போதுமானவை. ஒரு டென்சில் கொப்பேகடுவ கொல்லப்பட்டதோடு வலிகாமத்தின் மீதான அவரது பெருமெடுப்பிலான இராணுவ நடவடிக்கை முற்றுப்பெற்றமை இங்கு குறிப்பிடத்தக்கது.

### இராணுவச் சிந்தனையில் நம்பிக்கை வைத்தால்..

''மேசனிடம் புத்திகேட்டால் வீடு கட்டச் சொல்வான்'', ''இராணுவத்திடம் புத்தி கேட்டால் வாளை உருவச் சொல்வான்''. அரசு இராணுவச் சிந்தனையில் நம்பிக்கை வைக்குமாயின் நிலைமை மேலும் மேலும் மோசமடையவே செய்யும். ஓர் அரசை ஸ்தம்பிக்கச் செய்ய பெரும் படைப்பிரிவுகள் தேவையில்லை. பலம்பொருந்திய அணிகள் போதும்.

மிகவும் நொய்தலடைந்து போயுள்ள இலங்கையின்அரசியல் பின்னணியில் - தோல்வியடைந்த நாடுகளின் பட்டியலுக்குள் இலங்கை பிரவேசிக்கும் பின்னணியில் - பலமான ஓர் எதிர்க் கட்சிப் பாரம்பரியத்தைக் கொண்டுள்ள இலங்கையின் அரசியற் பின்னணியில் வெளிநாடுகளின் அரசியலுக்குக் களமாகக் காணப்படும் இலங்கையின் அரசியற் பின்னணியில் - தமிழ்மக்கள் அரசால் ஒடுக்கப்பட்டு வருகின்றனர் என்பது சர்வதேச ரீதியாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கும் பின்னணியில்-அத்தகைய ஒடுக்குமுறைக்கு எதிரான ஆயுதப்போராட்டம் மூன்று தசாப்த காலப் பாரம்பரியத்தைக் கொண்டிருக்கும் பின்னணியில்-அரசின் இருதயத்தின் மீது ஒரு சிறு அணியால் நிகழ்த்தக்கூடிய ஒரு வெற்றிகரமான தாக்குதல் மூலமே அரசைச் செயலிழக்கச் செய்யவோ ஸ்தம்பிதமடையச் செய்யவோ அன்றிக் கவிழ்க்கவோ முடியும். அரசிற்கு ''அதிர்ஷ்டம் ஒவ்வொரு கணமும் வேண்டும். ஆனால், அதனைத் தாக்குபவருக்கு அதிர்ஷ்டம் ஒருகணம் வந்தாற் போதும்''.

## எதிர்காலத்தில் அதிர்வலைகளை உண்டாக்கும்

பதிவுசெய்தல் முக்கியமானதாகும்.

தமிழீழ மண்ணில் இந்திய அமைதிப் படை [ஐ.பி.கே.எவ்.] நிலைகொண்டிருந்த காலப்பகுதியில் கருத்தரித்த குழந்தைகள் இவர்கள். இவர்கள் அனைவரும் ஐ.பி.கே.எவ். வெளியேறுவதற்கு சற்று முன்பின்னான காலத்தில் பிறந்தவர்கள். சுமாராக இவர்கள் அனைவரினதும் பிறப்பு வருடம் 1989ஆம் ஆண்டாகும். படுகொலைக்குள்ளான போது இவர்கள் அனைவருமே முதிராத இளம் பருவப் பள்ளிப்பிள்ளைகள். சுமாராக 16 அல்லது 17 வயது. இந்த அப்பாவி இளந்தாராக் குஞ்சுகளை விமானக்குண்டுக்கள் சற்றும் இதயமின்றிப் பதம்பார்த்தன. இந்த அப்பாவிக் குஞ்கள் அனைத்தும் பிறந்து வளர்ந்தது யுத்த காலத்திற்தான். யுத்தச்சூழலில் அவர்களது கிராமம்தான் அவர்களது உலகம்.

உலகின் . நாலாபுறங்களிலுமுள்ள ஏனைய மாணவர்களைப் போல அவர்கள் கல்வி உலாக்களையோ சுற்றுலாக்களையோ அனுபவித்ததில்லை. இந்தப் பச்சைத் தாராக் குஞ்சுக்கள் அப்படி ஒரு சுற்றுலாச் சுகத்தை-மகிழ்ச்சியை ஒரு போதும் அனுபவிக்க வாய்ப்பிருக்கவில்லை. கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்த பல பாடசாலைகளின் இத்தாராக்குஞ்சுகளுக்கு இது ஒரு புது அனுபவம். சராசரியாக அல்லது அனேகமாக இச்சிறுமிகள் தங்கள் பெற்றோரிடம் இரண்டாயிரம் ரூபாவை வாங்கியிருக்கிறார்கள். உள்ளாடைகள் உட்பட அனைத்தையுமே புதிதாக வாங்கினார்கள். பேனாக்களைத் தவிர அவர்கள் எடுத்துச் சென்ற அனைத்தும் புதியவை; அணிந்து சென்ற ஆடைகள் அனைத்தும் புதியவை. சவர்க்காரப் பெட்டிகள் அனைத்தும் புதியவை. முகப்பூச்சுக் கிறீம் உட்பட அழகு சாதனப்பொருள்கள் அனைத்தும் புதியவை. இத்தகைய அப்பாவி சிறுமிகளுக்குத் தான் ''பயங்கரவாதிகள்'' என்று பெயர் சூட்டிக் குண்டுவீசினார்கள். இதயம்படைத்த எந்தவொரு மனிதனும் இதனை மன்னிக்கமாட்டான். எந்தவொரு தமிழனும் தன் வாழ்நாளில் இதனை மறக்கவும் மாட்டான். மன்னிக்கவும் மாட்டான். இப்படுகொலைக்குப் பொறுப்பான ராஜபக்ஷ அரசாங்கத்தின் மீது அனைத்து தமிழ்மக்களின் கோபமும் வெறுப்பும் ஆழப்பதிந்துள்ளன. அத்துடன் கூடவே இத்தகைய கோபமும் சினமும் தமிழக மக்களின் நெஞ்சங்கள்வரை பரந்து செல்வதும் ஒரு முக்கிய வரலாற்று அம்சமாகும்.

தமிழ்மக்கள் மீதான தனது பற்றையும் பாசத்தையும் தமிழகம் ஒரு குரலில் ஓங்கி ஒலித்துள்ளது. வள்ளிபுனம் பள்ளிச்சிறுமி

மக்களின் நிலைப்பாடு சந்தேகத்திற்கு இடமன்றி தமிழகத்தின் பக்கம் சார்ந்ததாகவே எப்போதும் அமையும்.

ஆனால், அரசினதும் விமானப்படையினதும் மேற்படி கொடூரப் படுகொலைக்கு ஏற்ற பதில் தாக்குதல்களை புலிகள் செய்


விமானக் குண்டுவீச்சில் பலியானவர்களும், சடலங்களை இனம்காணத் தேடும் பெற்றோர், உறவினர்களும்....



### எதிர்காலத்திற்கு கட்டியம் கூறுகிறது

1971ஆம் ஆண்டு பங்களாதேஷ் விவகாரத்தையொட்டி வெடித்த இந்தோ - பாக் யுத்தத்தில் ஸ்ரீமாவோ அரசாங்கம் முதலில் பாகிஸ்தானுக்குச் சாதகமாகவே செயற்பட்டது. ஆனால், ஈழத்தமிழரின் ஏகோபித்த ஆதரவு இந்தியா பக்கமே இருந்தது. அப்போது பாகிஸ்தானிய இராணுவம் ஆகாய வழியாக கொழும்பிற்கூடாகப் பறந்து பங்களாதேஷ் செல்ல ஸ்ரீமாவோ அரசாங்கம் பாகிஸ்தானுக்கு அனுமதியளித்தது. இறுதியில் அப்போது இந்தியப் பிரதமராயிருந்த திருமதி இந்திராகாந்தியின் கண்டிப்பான உத்தரவின்பேரினாற்தான் அப்போக்குவரத்து வசதியை கொழும்பு நிறுத்தியது.

புவியியல் அமைவிடத்தின் பெயராலும் இன அடையாளத்தின் பெயராலும் தமிழக - தமிழீழ உறவு ஒருபோதும் பிரிக்கப்பட முடியாததும் ஒருங்கிணைந்து செயற்பட வேண்டிய அத்தியாவசியத்தை கொண்டதுமாகும்.

இந்திய முன்னாள் பிரதமர் திரு.ராஜீவ் காந்தியின் மரணத்தை தொடர்ந்து தமிழக - தமிழீழ உறவுபெருமளவு ஸ்தம்பிதமோ உறைநிலையோ அடைந்து கொண்டது. ஆனால் ஒன்றரை தசாப்த இடைவெளியின் பின்பு தமிழகம் தனது பிரிக்கவொண்ணாப் பாசப்பிணைப்பை தமிழீழ மக்கள் மீது உறுதிபட வெளிப்படுத்தியுள்ளது. கோர விமானப் படுகொலையில் தமது புதல்விகளை இழந்து தவித்த தமிழீழ மக்களின் நெஞ்சங்களில் தமிழகம் பாலை

யமாட்டார்கள் என்று ஒருவரும் ஒருபோதும் எதிர்பார்க்கமுடியாது. வள்ளிபுனம் படுகொலைச்சம்பவம் அத்தோடு முடிந்து போன கதையல்ல.

நான்காம் உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டுப் படுகொலைகளுக்கு அரசு இன்று வரை பதில்சொல்லவேண்டி இருப்பது போலவே, வள்ளிபுனம் படுகொலைக்கும் பதில்சொல்லவேண்டிய விளைவுகள் எழும். இது எனது வரலாற்றுக்கணிப்பு . மயிலாய் படுகொலை, யாலியன் வாலாபாக் படுகொலை, என்பவை வரலாற்றில் ஏற்படுத்திய தாக்கம்போல் வள்ளிபுனம் சிறுமிகள் படுகொலையும் வரலாற்றில் நின்று தாக்கம் விளைவிக்கவல்லதாகவே அமைந்துவிட்டது எனலாம். வள்ளிபுனம் சிறுமிகள் படுகொலை தமிழ்மக்களை முற்றிலும் ஐக்கியப்படுத்தியுள்ளது. அது தமிழகம்வரை விரிந்துள்ளது.

இரண்டுவாரங்களுக்கு பாடசாலையை மூடிவிட்டதன் மூலம் வள்ளிபுனம் படுகொலைக்கான விளைவுகளைத் தடுத்துவிடலாம் என்றில்லை. தமிழ்மாணவிகளின் உயிருக்குப் பதில் சிங்கள மாணவிகளின் உயிரல்ல என்பது தெளிவு. ஆனால், அரசின் இருப்பையும் இதயத்தையும் தாக்கவல்ல பதில் தாக்குதல்களை புலிகள் செய்யமாட்டார்கள் என்று சொல்லமுடியவில்லை. விமானக் குண்டுவீச்சுவிவகாரத்தில் தாம் கையோங்கியுள்ளதாக அரசு நம்பமுடியும். ஆனால் [illegible] மிக்க இராணுவத் தாக்குதல்களைப் புரிவதில் புலிகள் கை தேர்ந்தவர்கள் என்பதை கடந்த காலங்க

எனவே, தமிழருக்கு மட்டும் கொள்ளி வைப்பதாக நம்பி அரசு இராணுவத் தாக்குதல்கள் மீது நம்பிக்கை கொள்ளுமேயானால் அது அரசுக்கும் தீவுக்குமே கொள்ளி வைப்பதாக முடிந்துவிடவும் வாய்ப்பு உண்டு.

''ஒவ்வொரு செயலையும் அச்செயல் தரவல்ல விளைவினாற்தான் மதிப்பீடு செய்யவேண்டுமே தவிர அச்செயல் தரவல்ல கவர்ச்சியினால் அல்ல''.

மு.திருநாவுக்கரசு
(அரசியல் ஆய்வாளர்)

பள்ளிச் சிறுமிகள் மீதான படுகொலை ஏற்படுத்திய அச்சத்தின் விளைவாக தீவடங்கிலுமுள்ள அனைத்துப் பாடசாலைகளும் இருவாரங்களுக்கு ஸ்தம்பித்துப்போனமை ஓர் உடனடி விளைவிற்கான உதாரணமாகும். அதாவது தமிழ்மாணவிகள் மீது குண்டுவீசியதன் விளைவு அனைத்துச் சிங்களப் பாடசாலைகளையும் அரசு மூடுவதில் முடிந்தது. இதன்படி பார்க்கையில் வள்ளிபுனத்தில் வீசிய குண்டு தமிழ்ச் சிறுமிகளை மட்டும் கொல்லவில்லை. கூடவே அக்குண்டுகள் சிங்களப் பாடசாலைகளையும் மூடிவிட்டன என்ற வரலாற்று உண்மையை ஒருபோதும் மறுக்கமுடியாது.

இப்படியே இராணுவச் சிந்தனையின் எதிர்கால நடவடிக்கைகளுக்குமான விளைவுகள் அமையும். அரசு கொள்ளிக்கட்டை தூக்குவதைக் கவர்ச்சிகரமானதாகக் கருதுமேயானால் அது வரப்போகும் புத்தாண்டில் தீவைச் சாம்பலாக்குவதில் போய் முடியக்கூடும். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரமாவட்ட கல்வித்திணைக்கள அலுவலர்கள் கையெழுத்திட வசதி

யாழ்ப்பாணம்.செப்.10

வெளிமாட்டங்களில் இருந்து யாழ்ப்பாணம் வந்து அசாதாரண சூழ்நிலை காரணமாகத் திரும்பித் தமது சொந்த இடங்களுக்குச் செல்ல முடியாதுள்ள கல்வித்திணைக்களங்களைச் சேர்ந்த 600 பேர் நேற்று முன்தினம் முதல் யாழ்.கல்வி வலயத்தில் கையொப்பம் இடுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

திணைக்களத் தேவைகளுக்காக வெளிமாட்டங்களில் இருந்து அலுவலர்கள் யாழ்ப்பாணம் வருகை நந்திருந்தனர்.

கடந்த மாதம் 11ஆம் திகதி ஏ-9 வீதி மூடப்பட்டதை அடுத்து இவர்கள் தமது சொந்த இடங்களுக்குச் சென்று கடமைகளைப் பொறுப்பேற்க முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக யாழ்.கல்விவலயத்தில் இவர்கள் கையொப்பம் இடுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

வன்னி, வவுனியா, கொழும்பு, மட்டக்களப்பு போன்ற மாவட்டங்களைச் சேர்ந்த கல்வித்திணைக்கள அதிகாரிகளே நேற்று முன்தினம் முதல் இங்கு கையொப்பம் இடுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகக் கல்வித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவிததுள்ளன. (ப-203)

# மரவள்ளி பயிரிடுவதில் பொதுமக்கள் ஆர்வம்

யாழ்ப்பாணம்.செப்.10

யாழ். மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள உணவுத்தட்டுப்பாட்டைத் தொடர்ந்து உப உணவுப்பயிரான மரவள்ளிக் கிழங்குக்கான கட்டைகளை நடுவதில் மக்கள் ஆர்வம் காட்டத் தொடங்கியுள்ளார்கள்.

பரவலாக பொதுமக்கள் தமது வீடுகளின் அருகில் தரிசாக உள்ள நிலப்பகுதியில் மரவள்ளிக்கட்டை மற்றும் உணவுப்பயிர் வகைகளையும் நாட்டுவ்தில் ஆர்வம் காட்டத் தொடங்கியுள்ளார்கள்.

தற்போது மரவள்ளிக்கட்டையைப் பெறுவதில் பொதுமக்கள் ஆர்வம் காட்டத் தொடங்கியதைத் தொடர்ந்து தோட்டங்களில் வெறுமனே கிடந்த மற்றும் புதைக்கப்பட்டும் வந்த மரவள்ளித் தடிகள் தற்போது பணப்பெறுமதி உடைய பொருளாக மாறியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (ப-68)

## தென்மராட்சி பிரதேசத்தின் அனர்த்த முகாமைத்துவக் கூட்டம்

தென்மராட்சி.செப்.10

தென்மராட்சி பிரதேச அனர்த்த முகாமைத்துவக் கூட்டம் நாளை மறுதினம் நண்பகல் 12 மணிக்கு பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

துறைசார்ந்த அதிகாரிகளை இக்கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு பிரதேச செயலர் செ.ஸ்ரீனிவாசன் அறிவித்துள்ளார். (ப-117)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் கண்ணீர் அஞ்சலியும்



**அமரர் சுப்பையா இராசேந்திரம்**

*12-08-2006 சனிக்கிழமை சிவபதமடைந்த எமது நண்பன் இராசேந்திரம் ரகுபாரின் பாசமிகு தந்தை அமரர் சுப்பையா இராசேந்திரம் அவர்களிற்கு எமது கண்ணீர் அஞ்சலியைத் தெரிவித்து அவரது 31ஆம் நாளை நினைவுகூருவதோடு, அன்னாரின் பிரிவினால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து அன்னாரின் ஆத்மா சந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

*ஓம் சாந்தி சாந்தி சாந்தி!*

நண்பர்கள்
கி.தங்கவடிவேல் (J.P), சி.தயாபரன், சோ.விஜயரூபன், ஆ.ஜெயன்.

கோப்பாய். (53616)

# இருப்பிடம் திரும்பியவர்கள் மீண்டும் இடம்பெயர்வு

தென்மராட்சி.செப்.10

தென்மராட்சி கிழக்குப்பகுதியில் இடம்பெற்ற எறிகணைத் தாக்குதல்களால் இடம்பெயர்ந்து பின்னர் தமது இருப்பிடங்களுக்குத் திரும்பிய பல குடும்பங்கள் கடந்த வியாழனன்று மீண்டும் இடம்பெயர்ந்தனர்.

அன்றையதினம் கொடிகாமம் பகுதியில் எறிகணைகள் வீழ்ந்து வெடித்ததனால் மக்கள் இடம்பெயர்ந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, தென்மராட்சி கிழக்கு, வடக்கு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த சுமார் 10 ஆயிரம் பேர் இடம்பெயர்ந்து வடமராட்சிப் பகுதியில் தஞ்சமடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (ப-117)

## முத்தையா நினைவுதின பிரார்த்தனை நிகழ்வு

கல்வியங்காடு,செப்.10

ஆத்ம ஜோதி ஆ.முத்தையா நினைவு தினமான நேற்று முன்தினம் நாட்டில் சாந்தி சமாதானம் வேண்டி கூட்டுப் பிரார்த்தனை நிகழ்வு ஒன்று ஏழாலை ஆத்ம ஜோதி மணி மண்டபத்தில் நடைபெற்றது.

பெருமளவு ஊர்மக்களும் அறநெறிப் பாடசாலை மாணவர்களும் கலந்து கொண்ட இந்நிகழ்வில் விசேட பூஜைகளும் பஜனைகளும் இடம்பெற்றது. இறுதியில் கலந்து கொண்ட அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது. (79)

## முன்பள்ளி வருடாந்த விளையாட்டு விழா

யாழ்ப்பாணம்,செப்.10

கட்டுடை திருவள்ளுவர் சனசமூக நிலையத்தின் முன்பள்ளி வருடாந்த விளையாட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ளதாக நிலையத் தலைவர் தெரிவித்துள்ளார். (95)


**விற்பனைக்கு**

புதிய LML (Select-II) ஸ்கூட்டர் விற்பனைக்குண்டு
தொடர்பு:- 70, நாயன்மார் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி 021 222 9263

**கிராம அலுவலர் தரம் II போட்டிப் பரீட்சை பயிற்சி வகுப்புகள்**
ஆரம்பம் 11.09.2006 திங்கள் 3 p.m.
O/L சித்தியடைந்தவர்கள் விண்ணப்பிக்க முடியும். விவரங்களை நேரில் பெறவும்.
**திகழ் கல்வி நிறுவனம்**
கே.கே.எஸ். வீதி, இணுவில்.


**தவறிவிட்டது**

புவனேஸ்வரி சுப்பிரமணியம் என்பவரது தேசிய அடையாள அட்டை (397591506V), விசேட அடையாள அட்டை என்பன பேர்ஸுடன் யாழ். ஆஸ்பத்திரிவீதியில் 08.09.2006 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் திருமதி பத்மினி மகாதேவன், அராச்சியார் வளவு, கொக்குவில் கிழக்கு, கொக்குவில் என்னும் முகவரியில் ஒப்படைத்து உதவவும்.


**வீடு விற்பனைக்கு**

கொழும்பு, வெள்ளவத்தையில் சுவீசுத்தாராம வீதியில் (W.A.D. சில்வா மாவத்தையில் இருந்து 75m தூரத்தில்) உட்புற குளியலறையுடைய 2 படுக்கையறையுடன், ஒரு வாகனத்தரிப்பிடம் கொண்ட 6.05பேர்ச் காணியில் அமைந்த வீடு விற்பனைக்குண்டு.
தொடர்பு:- **T.A. Mohamad 0777 220660**


## கண்ணீர் அஞ்சலிகள்



அன்பும் பண்பும் கொண்டவரும், கடமையில் கண்ணும் கருத்துமான எம் அன்புச் சகோதரன்

**அமரர் S.M.மரியநாயகம்**

அவர்களின் மறைவையிட்டு ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதுடன், அவரின் ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

திரு.திருமதி M.A..கிளறன்ஸ்,
திருமதி ஏ.எவ்.ஜே.ரூபசிங்கம்,
திரு.திருமதி M.R. கலிஸ்ரஸ் (கொலண்ட்),
திரு.திருமதி M. லெனாட் (பிரான்ஸ்),
திரு.திருமதி M பேனாட் (கொலண்ட்),
திரு.திருமதி S. குலேந்திரன்.

32, சென். பற்றிக்ஸ் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 6057 (53621)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பும்

எழுகதிராய் 30 - 06 - 1933



உதிர்மலராய் 12 - 08 - 2006

**அமரர் சுப்பையா இராசேந்திரம்**

**ஆலம் விழுதினைப் போல் உறவு ஆயிரம் வந்துமென்ன**
**வேரென நீர் இருந்தால் வீழ்ந்து விடாதிருந்தோம்**
**தேர் ஓட முன் ஓடும் திருவடம் போல் நீர் இருந்த**
**நாள் ஒன்றுதான் வருமோ நாம் மகிழ்ந்து கண்களிக்க.**

ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*எமது குடும்பத் தலைவரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை இன்று [10.09.2006] ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்வில் கலந்து அமரரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதுடன், மதிய போசனத்திலும் பங்குகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

*ஆசிரியர் கலாசாலை வீதி, கோப்பாய் தெற்கு, கோப்பாய்.* (53632)

உங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்கள்

### சேவியர்தாஸ் ஜிட்டா ஜீவராஜ் (சூட்டி)



யாழ். நல்லூரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சேவியர்தாஸ் ஜிட்டா ஜீவராஜ் (சூட்டி) அவர்கள் நேற்றுமுன்தினம் (08.09.2006) வெள்ளிக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் சேவியர்தாஸ் - அனற் தவமணி ஆகியோரின் பாசமிகு மகனும் ஜொய்லின் வசந்தி (கனடா), அன்ரன் ஜோ ஜெயராஜ் (அமரர்), ஜினோ ஜெனிராஜ், றெக்னோ றூபராஜ் ஆகியோரின் அன்புச் சகோதரனும் விஜயரத்தினம் (கனடா), ஷாமினி (வலி.தென்மேற்கு பிரதேச சபை) ஆகியோரின் மைத்துனரும் ஜனந்தினி, நிலக்ஷா ஆகியோரின் பாசமிகு மாமனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை **A.F.** றேமன் மலர்ச்சாலை (பொறளை, கொழும்பு) யில் இன்று (10.09.2006) ஞாயிற்றுக் கிழமை நடைபெற்று மு.ப. 10 மணிக்கு மாறம்பிட்டிய சேமக் காலையில் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நீண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*310, பருத்தித்துறை வீதி, நல்லூர்.* (53628)

தகவல்: குடும்பத்தினர்.

### Dr. சமத்தர் ஜேம்ஸ் குணரட்ணம்

*[வைத்திய அதிகாரி, லேக் கவுஸ்]*



ஒட்டகப்புலம், வசாவிளானைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகக் கொண்டவருமாகிய **Dr.** சமத்தர் ஜேம்ஸ் குணரட்ணம் நேற்று கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மரியாம்பிள்ளை பொன்னையா சமத்தர் (முறிவு, நோ வைத்தியர்), பேதுருப்பிள்ளை இராசம்மா ஆகியோரின் மூத்த புதல்வரும் காலஞ்சென்ற கு.வி. ஆசீர்வாதம் றோசம்மா ஆகியோரின் மருமகனும் பௌலீனா யோகராணியின் அன்புக் கணவரும் விக்ரறின் சசீலா, அஞ்சலிற்றா தனுஷா, ஜோயல் ஆகியோரின் பாசமிகு தந்தையும் நேசறட்ணம், மேரி அரியநாயகம், கனகறட்ணம் (யாழ். ஜெய்ப்பூர்), நவமணி அமலதாஸ் ஆகியோரின் பிரிய சகோதரரும் றொகான் ஜோசப் அவர்களின் மாமனும் றெசோனின் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் **A.F.** றேமன்ஸ் மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, பூதவுடல் இன்று (10.09.2006) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 4 மணியளவில் கனத்தை கத்தோலிக்க சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*50/1, கண்டி வீதி, யாழ். தொ.பே. 0776632780* (53629)

தகவல்: மனைவி.


# மானிப்பாயில் கணனிக் கல்வி ஆரம்பம்

மானிப்பாய் மாணவர்களது நன்மைகருதி கீழ்வரும் கணனிக் கற்கை நெறிகள் மிகக் குறுகிய காலத்தில், மிகக் குறைந்த கட்டணச் சலுகையுடன் ஆரம்பம்

- Diploma in Microsoft Office With Web Technology
- Diploma in Desktop publishing
- Diploma in Computerized Accounting Packages
- Diploma in Hardware Engineering
- Diploma in Computer Programming
- Diploma in Video Mixing With Multimedia & Etc.....

80% Offer

- விண்ணப்பப் படிவங்களை இன்று தொடக்கம் எமது நிறுவனத்தில் மாணவர்கள் பெற்றுக் கொள்ள முடியும். விண்ணப்ப முடிவுத் திகதி 14.09.2006
- அனைத்து வகுப்புக்களும் Online Class வகுப்புக்களாகும்
- வகுப்புக்கள் ஆரம்பம் 15.09.2006 நேரம் காலை 9.30
- முதலில் இணையும் மாணவர்களுக்கு விசேட கட்டணச் சலுகைகள் வழங்கப்படும்.

மேலதிக விபரங்களுக்கும் விண்ணப்பப் படிவங்களுக்கும்
UNI TECHNOLOGY
ICT Education Trainers
Manipay
( மானிப்பாய் பிரதேச சபைக்கு நேர் எதிரே )


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடைக் குறிச்சி, வடவரணி மக்களுக்கு நாவற்காடு கிளையில் வைத்து நிவாரணம்

தென்.கிழக்கு, செப்.10

தென்மராட்சி கிழக்கு ப.நோ.கூ.சங்கத்தின் இடைக்குறிச்சி, வடவரணி ஆகிய கிளைகள் தற்சமயம் கொடிகாமம் வீதியில் இயங்கும் நாவற்காடு கூட்டுறவுக் கிளையுடன் இணைக்கப்பட்டுள்ளன.

யாழ்.மாவட்ட செயலகத்தினால் தற்போது வழங்கப்பட்டுவரும் அவசர நிவாரண உதவிப் பொருள்களை இடைக்குறிச்சி, வடவரணி பிரதேச மக்கள் யாழ்.மாவட்ட செயலகத்தினால் தற்போது வழங்கப்பட்டு வரும் அவசரநிவாரண உதவிப் பொருள்களை நாவற்காடு கூட்டுறவுச் சங்கக் கிளையில் பெற்றுக்கொள்ளலாம் என்று கூட்டுறவுச் சங்கப் பொது முகாமையாளர் சி.தேவகுமார் பொது அறிவித்தல் மூலம் கேட்டுள்ளார்.

கடந்த மாதம் 11 ஆம் திகதி வரணிப் பகுதியில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையை அடுத்து மேற்படி பிரதேச மக்கள் பலரும் இடம் பெயர்ந்து வடமராட்சிப் பிரதேசத்தில் உள்ள பாடசாலைகளிலும் உறவினர் வீடுகளிலும் தங்கியுள்ளனர்.

இந்தச் சூழ்நிலையில், இடம் பெயர்ந்த பொதுமக்கள் நாவற்காடு பிரதேசத்துக்குச் சென்று பங்கீட்டுப் பொருள்களைப் பெறுவதில் பெரும்சிரமங்களை எதிர்நோக்குவதாகக் கூறப்படுகிறது.

இடைக்குறிச்சி, வடவரணிக்கிளைகள் ஊரடங்குச் சட்ட நேரம் உடைக்கப்பட்டு அங்கிருந்த பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டதை அடுத்து தமக்கு இந்த நிலை ஏற்பட்டுள்ளதாக பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

(122)

# வலி.தெ.மேற்கு மத்தியஸ்தர் சபை மீண்டும் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,செப்.10

வலி.தென்மேற்கு சண்டிலிப்பாய் மத்தியஸ்தர்சபை மீண்டும் வழமைபோல் ஆரம்பிக்கப்படடுள்ளது.

மத்தியஸ்தர் சபையில் முறைப்பாடுகள் தாக்கல் செய்தவர்கள் உரிய நேரத்தில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரிக்கு சமுகம் தருமாறு தவிசாளர் கு. ஜெகநாதன் கேட்டுள்ளார்.

இதுவரை வலி. தென்மேற்கு சண்டிலிப்பாய் மத்தியஸ்தர் சபையில் 14க்கும் மேற்பட்ட பிணக்குகள் பதியப்பட்டு சபை மூலம் தீர்வுக்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன.

வலி.தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட 28 கிராம அலுவலர் பிரிவில் உள்ள மக்கள் தமக்கு ஏற்படும் பிரச்சினைகள், பிணக்குகளை பிரதி ஞாயிறு தோறும் காலை 9.30 மணிக்கு பதிவுசெய்து தீர்த்துக்கொள்ளலாம்.

இதேவேளை-குடாநாட்டில் உள்ள ஏனைய மத்தியஸ்தர் சபைகளும் மீண்டும் அவ்வவ் இடங்களில் ஆரம்பித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(ப-95)

# நலன்புரி நிலையங்களில் இலவச மருத்துவ சோதனை

தென்மராட்சி.செப்.10

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தினர் தென்மராட்சி பிரதேச மந்துவில் பகுதியில் உள்ள நலன்புரி நிலைங்களில் இலவச மருத்துவ பரிசோதனைகளை நடத்தினர்.

மந்துவில் வடக்கு அ.த.க பாடசாலை, மந்துவில் ஸ்ரீ பாரதி வித்தியாலயம் ஆகிய இடங்களில் கடந்த 8ஆம் திகதி இவர்கள் நடத்திய மருத்துவப் பரிசோதனைகளில் 50க்கு மேற்பட்டோர் சிகிச்சை பெற்றனர்.

நலன்புரி நிலையங்களுக்கான மருத்துவ முகாம் வாராவாரம் நடத்தப்படுமென டாக்டர் சி.ஜமுனானந்தா தெரிவித்தார்.

(ப-117)

# மகாஜனக் கல்லூரி அதிபர் பதவிக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம்.செப்.10

வலிகாமம் கல்வி வலயத்திற்குட்பட்ட மகாஜனக் கல்லூரியில் நிலவும் அதிபர் பதவி வெற்றிடத்தை நிரப்புவதற்குத் தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இலங்கை அதிபர் சேவை வகுப்பு 1, வகுப்பு 2.1(பட்டதாரிகள்) ஆகியோரிடம் இருந்தும் இலங்கை ஆசிரிய சேவை வகுப்பு 1, வகுப்பு 2.1 (பட்டதாரிகள்) ஆகியோரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதற்கான மாதிரி விண்ணப்பப்படிவத்தினை வலயக்கல்வி அலுவலகத்தில் பார்வையிட்டு எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களை அனுப்பிவைக்குமாறு வலிகாமம் வலயக் கல்விப்பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரன் தெரிவித்துள்ளார்.(ப-203)

# சிகரெட் பன்மடங்கு விலையேற்றம் அதனால் பீடி, சுருட்டுக்கு நல்ல மவுசு

யாழ்ப்பாணம்.செப்.10

யாழ்.நகரப்பகுதியில் சிகரெட் வகைகளுக்கு நாளுக்குநாள் தட்டுப்பாடு ஏற்பட்டு வருவதாக பாவனையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இதனால் மூன்று ரூபாய் விற்ற பிறிஸ்ரல் 12ரூபாவிற்கு அதிகமாகவும்,12 ரூபாய் பெறுமதியான சிகரெட் 20ரூபா வரையும் சில இடங்களில் விற்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சிகரெட் தட்டுப்பாடு காரணமாக பீடி விலையும், சுருட்டு விலையும் அதிகரித்துள்ளது. இவைகளின் மவுசும் அதிகரித்துள்ளது. ஒரு கட்டு பீடி 22 ரூபாவுக்கும் அதிகமாக நகரப்பகுதியில் விற்கப்படுவதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

(ப-88)


**யாழ்ப்பாணம் மாவட்ட**
**வெதுப்பக உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம்[வ-து]**

*வெதுப்பக நிலைய சகலஅங்கத்தவர்களுக்கும்*

தற்போதைய நடைமுறைப்படி தங்கள் தங்கள் பிரதேச செயலரினால் சிபார்சு செய்யப்படும் வெதுப்பகங்களுக்கே மா வழங்கப்படுவதாக தீர்மாணிக்கப்பட்டுள்ளதால் சகல உரிமையாளர்களும் பிரதேச செயலரூடாக நாள் ஒன்றுக்கு வேலைசெய்யும் மாவினை (50 கி) உறுதிப்படுத்தி தரும்படி கேட்டுக்கொள்கிறோம்.

(53636) நிர்வாகம்.
யா.மா.வெ.உ.கூ.ச (வ-து).



**யாழ்- மாவட்ட**
**பேக்கரி உரிமையாளர் சங்கம்**

*முக்கிய அறிவித்தல்*

சகல வெதுப்பக உரிமையாளர்களும்(புதிய, பழைய) தங்கள் தங்கள் பிரதேச செயலருடன் தொடர்பு கொண்டு, தங்களால் உற்பத்தி செய்யப்படும் பாணுக்குரிய மாவை பிரதேச செயலரின் ஊடாக உறுதிப்படுத்திய கடிதத்தோடு, திங்கட்கிழமை (11.09.2006) காலை 10 மணிக்கு முன் சங்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

(சி-50973) -நிர்வாகம்.


# கரவெட்டி ஆஸ்பத்திரி கட்டடக் காணி சுவீகரிக்கப்படும்

தென்மராட்சி கிழக்கு,செப்.10

கரவெட்டி மத்தி, அம்பம் ஆஸ்பத்திரி அமைந்திருக்கும் காணி அரசினால் சுவீகரிக்கப்படவுள்ளது.

இந்த ஆஸ்பத்திரி அமைந்திருக்கும் காணி பல ஆண்டு காலமாக எவரினாலும் உரிமை கோரப்படாமல் இருந்து வந்துள்ளது- என்றும்

இதனை அடுத்து இந்தக் காணியை அரச காணியாக சுவீகரிக்க ஆலோசிக்கப்பட்டுள்ளதாகவும் - யாழ். பிரதி சுகாதார சேவைப் பணிப்பாளர் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே இந்தக் காணி பற்றி உரிமையாளார்கள் எவரும் இருப்பின் ஒரு மாத காலத்தில் தமக்கு உரிமைக் கோரிக்கையை விடுக்கும்படியும் சுகாதார சேவைப் பணிப்பாளர் பொது அறிவித்தல் மூலம் கேட்டுள்ளார்.

(122)

# இலவச நுண்கலை வகுப்புகள் விரைவில் ஆரம்பமாகும்

கல்வியங்காடு,செப்.10

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் யாழ். மாவட்ட அலுவலகம் நடத்தும் இலவச நுண்கலை வகுப்புகளின் புதிய பிரிவு விரைவில் ஆரம்பிக்கப்படவிருக்கின்றன.

பண்ணிசை, வயலின், மிருதங்க வகுப்புகள் ஆரம்பமாகவிருப்பதாகவும் பழக விரும்புவோர் நல்லூர் கோயில் முன்றலில் அமைந்துள்ள நாவலர் மணிமண்டபப் பொறுப்பதிகாரியுடன் தொடர்புகொள்ளுமாறு இந்து சமய விவகார அலுவல்கள் திணைக்களத்தின் வலிகாமம் அபிவிருத்தி உதவியாளர் அறிவித் துள்ளார்.

இதேவேளை-

மேற்படி அலுவலகத்தால் இலவச யோகாசன, தியா்ன வகுப்புகளும் விரைவில் ஆரம்பிக்கப்பட விருக்கின்றன.

ஆண்கள்,பெண்கள் மற்றும் நோயாளர்களுக்கான பயிற்சி வகுப்புகள் யாவும் தனித்தனியாக நடத்தப்படவிருப்பதாகவும் பழக விரும்புவோர் மேற்படி முகவரியுடன் தொடர்பு கொள்ள முடியுமென்றும் தெரிவிக்கப்பட்டது.

(ப -79)


**நாய்க்குட்டி விற்பனை**

காவலுக்குரிய தூய இன டோபர்மன்-பின்ச்சர் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு:
ஷென் மென் அக்குபன்சர் வைத்தியசாலை,
பிள்ளையார் வீதி, (தபாற்பெட்டி சந்தி)
திருநெல்வேலி. T.P-0214590527


# கண்ணீர் அஞ்சலி

எமது நண்பரும் கொக்குவில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலய பரிபாலன சபை உப தலைவருமான *திரு.பேரின்பநாயகம்* அவர்களின் பாசமிகு மனைவி

## அன்புமலர் பேரின்பநாயகம்

அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு ஆறாத்துயர் அடைகின்றோம். அவருக்கு எமது கண்ணீர்ப் பூக்களை காணிக்கையாக்குவதுடன் அவரது மறைவால் துயரும் அவரது குடும்பத்தாருக்கு எமது ஆறுதலைக் கூறுகின்றோம்.

கந்தையா இராமநாதன் குடும்பம்,
சி.ஜெயபாலசிங்கம், இ.ரஞ்சன்,
வே.கருணாமூர்த்தி, கு.சண்முகநாதன்,
செ.நாதன், ஆ.சத்தியமூர்த்தி.

# கண்ணீர் அஞ்சலி



எமது ஆலய பரிபாலனசபையின் உப தலைவர் *நா.பேரின்பநாயகம்* அவர்களின் துணைவியும் அம்பாளின் தொண்டருமாகிய

**திருமதி பேரின்பநாயகம் அன்புமலர்**

அவர்களின் இழப்பால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது சபையின் சார்பில் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்புதுடன் அவரின் ஆத்மா அம்பாளின் திருப்பாதங்களில் சாந்தியடைய அம்பாளைப் பிரார்த்திப்போமாக.

கொக்குவில் கிழக்கு. கொக்குவில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள்ஆலய பரிபாலனசபை.

# மரண அறிவித்தல்கள்

## திருமதி அன்புமலர் பேரின்பநாயகம்



வடலியடைப்பை பிறப்பிடமாகவும் தாவடி, கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அன்புமலர் பேரின்பநாயகம் நேற்று (09.09.2006) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் வடலியடைப்பைச் சேர்ந்த திரு. திருமதி கந்தையா இராசம்மா தம்பதியரின் அன்பு மகளும், கொக்குவில் கிழக்கை சேர்ந்த நாகலிங்கம்பிள்ளை- பவளம்மா தம்பதியரின் பாசமிகு மருமகளும், பேரின்பநாயகம் (CKP) அவர்களின் அன்பு மனைவியும் சசிகலா (ஆசிரியை, கோண்டாவில் இந்து மகா வித்தியாலயம்), துர்க்கா ஆகியோரின் அன்புத் தாயும் திரு திருமதி விஜயரட்ணம், காலஞ்சென்ற திரு திருமதி கந்தசாமி, திருதிருமதி அரசரட்ணம், திரு திருமதி கந்தசாமி, திரு திருமதி ஜெயரட்ணம், திரு திருமதி குணரட்ணம், திரு திருமதி துரைராஜா (ஆசிரியர், கொ.இ.கல்லூரி), திரு திருமதி சிவராஜா (கொழும்பு), திரு திருமதி ஐங்கரநேசன், திரு திருமதி மோசேஸ் ஆகியோரின் சகோதரியும், மைத்துனியும், திரு திருமதி தனபாலசிங்கம் (கனடா), திரு திருமதி நடராஜா, மனோன்மணி (பேபி) ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.09.2006) ஞாயிற்றுக்கிழமை நண்டகல் 12 மணிக்கு தாவடி இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தாவடி,*
*கொக்குவில்.* (53634)

தகவல்:
நா. பேரின்பநாயகம் (CKP)
(கணவர்).

## சதாசிவம் சத்தியசீலன்(றஞ்சன்)

(உரிமையாளர்- நியூ விதுஷன் நகை மாடம்)



மண்கும்பானைப் பிறப்பிடமாகவும், 347/2, கோயில் வீதி, நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட சதாசிவம் சத்தியசீலன் (றஞ்சன், நியூ விதுஷன் நகை மாடம்) அவர்கள் 08.09.2006 வெள்ளிக்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் சதாசிவம்- நாகலட்சுமி தம்பதியரின் மூத்த மகனும், காலஞ்சென்ற கனகசபாபதி- கமலாவதி தம்பதியரின் அன்பு மருமகனும், பொன்னேஸ்வரியின் (சுதா) அன்புக் கணவரும், திவ்வியா, டிலோசியா, கீர்த்திகா, கரிகரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஜெசீலன் (றமணி, சுவிஸ்), அருட்சீலன், சிவாஜினி, அமிழ்தினி, கமலினி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.09.2006) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன் மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*347/2, கோயில் வீதி,*
*நல்லூர்.*
*(துர்க்கா மணி மண்டபம் அருகில்)*

தகவல்:
திருமதி ச. பொன்னேஸ்வரி.
(மனைவி)
(53638)

## அம்பலவாணர் கணபதிப்பிள்ளை

(ஓய்வு பெற்ற விமானப்படை நூலக அதிபர்)

காரைநகர், புதுறோட்டை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அம்பலவாணர் கணபதிப்பிள்ளை அவர்கள் நேற்று (09.09.2006) சனிக்கிழமை இறையடி எய்தினார்.

அன்னார் மனோன்மணியின் அன்புக் கணவரும் தர்மதேவி, புஷ்பதேவி (ஆசிரியை, கொ/விவேகானந்தா கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும், லோகநாதன் (கொழும்பு), சிவசோதி (கால்நடை வைத்திய அதிகாரி, பேராதனை) ஆகியோரின் அன்பு மாமனும், காலஞ்சென்ற சிறிதரன் மற்றும் கிரிதரன் (பொறியியலாளர், சிங்கப்பூர்), பகீரதன் (ABANS), ஜெயதரன் (SJMS), ரவி சங்கர், சங்கீதா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.09.2006) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 8 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று காரைநகர் சாம்பலோடை மயானத்தில் தகனக்கிரியைகள் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*புதுறோட்,*
*காரைநகர்.* (53633)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



லெப். செல்லக்கிளி நினைவாக நிறுவப்பட்ட உடையார் கட்டு மகாவித்தியாலய வகுப்பறை கட்டடத்தொகுதி கையளிப்பு நிகழ்வின் போது எடுக்கப்பட்ட படங்கள் இவை

# தேசிய அரசில் இணைவோம்; இந்த அரசில் இணையோம்!

## ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கூறுகிறது

கொழும்பு, செப்.10

''நாட்டில் தற்போது இடம்பெற்றுக் கொண்டிருக்கின்ற யுத்தம் போன்ற நிலைமையை நீக்கி, நிலையான சமாதானத்தை உருவாக்கும் நோக்கில் தேசிய அரசு ஒன்றை அமைத்துச் செயற்பட ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முயற்சிக்கின்றமை உண்மையென்றால் அந்தத் தேசிய அரசில் இணைவது தொடர்பாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் விரைவில் ஒரு முடிவுக்குவரும். ஆனால், எக்காரணம் கொண்டும் தற்போதைய அரசுடன் முஸ்லிம் காங்கிரஸ் இணையாது.''

– இவ்வாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் நாடாளுமன்ற உறுப்பினரும், கட்சியின் செயலாளர் நாயகமுமான ஹஸன் அலி உதயனுக்குத் தெரிவித்தார்.

அரசுடன் இணைவதுபற்றி ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஏதேனும் தீர்மானம் எடுத்துள்ளதா என அவரிடம் வினவிய போதே அவர் இவ்வாறு கூறினார். அவர் மேலும் கூறியதாவது:-

அரசினால் தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் இராணுவ நடவடிக்கையானது நாட்டில் எத்தகைய நிலைமையைத் தோற்றுவிக்கப் போகிறது என்று தெரிய வில்லை.

இந்த இராணுவ நடவடிக்கை நிறுத் தப்பட்டு, சமாதான முயற்சிகள் முன்னெடுக் கப்படுமா அல்லது இந்நடவடிக்கையை மேலும் விஸ்தரித்து முழு அளவில் யுத்தம் ஒன்று முன்னெடுக்கப்படுமா என்ற கேள்வி பொதுவாக எழுந்துள்ளது.

இந்த இராணுவ நடவடிக்கை புலிகளால் மேற்கொள்ளப்படும் தாக்குதலை முறியடிக்கும் தற்காப்பு நடவடிக்கையே என்றும், யுத்தத்தைத் தொடங்காது பேச்சுமூலமே தீர்வு காணப்படும் என்றும் ஜனாபதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தீர்வை எட்டுவதற்காக அனைத்துக் கட்சிகளையும் ஒன்றிணைத்து தேசிய அரசு ஒன்றை அமைக்கப்போவதாகவும் ஜனாதிபதி கோடி காட்டியுள்ளார்.

தேசியஅரசு அமைக்கும் யோசனையை நாம் வரவேற்கின்றோம். இருந்தாலும், அத்தகைய அரசை அமைப்பதற்கான ஒப்பந்தத்தில் இடம்பெறக் கூடிய சில கருத்துகளுடன் நாம் உடன்பட முடியாது.

உதாரணமாக, தற்போதைய தேர்தல் முறைமையை மாற்றும் நிலைப்பாட்டை எம்மால் ஆதரிக்க முடியாது. தற்போதைய தேர்தல் முறைமையால் சிறுபான்மை இன மக்களுக்கு அதிக நன்மைகள் உள்ளன. ஆனால், இது மாற்றப்பட்டால் சிறுபான்மை இன மக்களுக்கு அதிக தீங்குகள் ஏற்படும்.

இத்தேர்தல் முறைமை மாற்றப்படுவதை ஐக்கிய தேசியக் கட்சியும் ஆதரிக்கின்றது. தேர்தல் முறைமைச் சீர்திருத்தத்தில் அடங்கியுள்ள சில விடயங்களைத் தாங்கள் வர வேற்கின்றனர் என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்திருக்கின்றார்.

தேர்தல் முறைமையை மாற்றுவதில் ஐக்கிய தேசியக் கட்சியும், அரசும் ஒன்றிணைந்து செயற்படும் என்றே தெரிகிறது. ஆனால், எம்மால் அதற்கு ஒத்துப்போக முடியாது.

தேர்தல் முறைமை மாத்திரமின்றி சமாதானப் பேச்சு, இனப்பிரச்சினைக்கான தீர்வு, அமைதிப் பேச்சின்போது முஸ்லிம் தனித்தரப்பு மற்றும் முஸ்லிம்களின் பாது காப்பு போன்ற விடயங்களை அடிப்படை யாகக் கொண்டு அவை தொடர்பாக எமக்கு சாதகமான பதில் கிடைத்தாலே அமையப்போகும் தேசிய அரசுடன் நாம் இணைவோம்.

வெறும் அமைச்சுப் பதவிகளைப் பெறும் நோக்கோடு தற்போதைய அரசில் ஒருபோதும் இணையமாட்டோம்.

தற்போது மூதூரில் மீளக்குடியமரும் முஸ்லிம்களுக்கு எதுவித பாதுகாப்பும் இல்லை. அவர்கள் எந்நேரமும் மீளவும் ஆபத்தை எதிர்நோக்கலாம். தங்கள் உடை மைகளைப் பாதுகாக்கும் நோக்கிலேயே அவர்கள் இப்போது மீளக்குடியமர்கிறார்கள். அரசு இதைக் கவனத்தில் கொள்ள வேண்டும்– எனக் கூறினார் அவர்.

(உ)

## குருமன்காட்டில் வெள்ளியிரவு 10 வீடுகளில் 300 பவுண் திருட்டு

வவுனியா, செப்.10

வவுனியா, குருமன்காடுப் பகுதியில் நேற்று முன்தினமிரவு 10 வீடுகளில் ஆயுத முனையில் பணம், நகை என்பன கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

ஆயுத முனையில் வீடுகளுக்குள் புகுந்தவர்கள் வீட்டில் இருந்தோரை துப்பாக்கி முனையில் இருத்தி விட்டு தமது கைங்கரியத்தை நிறைவேற்றியுள்ளனர்.

குறிப்பிட்ட 10 வீடுகளிலும் ஓரே பாணியில் கொள்ளைச்சம்பவம் இடம் பெற்றுள்ளதாக வவுனியா பொலீஸார் தெரிவித்துள்ளனர்.

கொள்ளையடிக்கப்பட்ட 10 வீடுக ளிலும் இருந்து 50 லட்சம் ரூபா பெறுமதியான 300 பவுண் நகைகளும் ஒரு தொகுதி பணம், கையடக்கத் தொலை பேசிகள் என்பன கொள்ளையர்களால் அபகரித்துச் செல்லப்பட்டுள்ளன என்றும் வவுனியா பொலீஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த மாதம் வவுனியா கோயில் குளம் பகுதியில் நடத்தப்பட்ட கொள்ளைச் சம்பவத்தின் போது கொள்ளையிட வந்த ஆயுததாரிகளின் சூட்டுக்கு இலக்காகி வீட்டுரிமையாளர் ஒருவர் உயிரிழந்ததும் மற்றுறொருவர் படுகாயமடைந்ததும் தெரிந்ததே.

## மாணவிகள் வீடு திரும்பினர்

திடீரென மயங்கி வீழ்ந்த நிலையில் மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருந்த கல்லடி உப்போடை விவேகானந்தா பாடசாலை மாணவிகளில் 68பேர் நேற்று வீடுதிரும்பினர். ஒரு மாணவி அதிதீவிர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவத்தில் மயக்கமடைந்த ஆசிரியர்களும் சிகிச்சையின் பின்னர் வீடுதிரும்பியதாகத் தெரிவிக்கப்பட்டது.

## 3,800 தொன்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொருள்கள் எடுத்துவரப்பட்டுள்ளதாக அறிய வந்துள்ளது.

நேற்றுக் காலை காங்கேசன்துறையில் இருந்து கோண்டாவில் களஞ்சிய சாலைக்கு பொருள்களை ஏற்றிவர சுமார் 50 இற்கு மேற்பட்ட லொறிகள் சென்றுள்ளதாகவும் அறியப்படுகிறது.

காங்கேசன்துறை துறைமுகத்தில் பொருள்களை இறக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து யாழ்.குடாநாட்டில் பதுக்கி வைக்கப்பட்டு இருந்த அரிசி, சீனி போன்ற பொருள்கள் ஓரளவுக்கு வெளிச்சந்தையில் விற்பனை செய்யப்பட்டதைக் காணக்கூடியதாக இருந்தது. (அ-1-68)

## தமிழினம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேம்பாட்டிற்கான முதலீடு. போர் எங்களுக்கு வாழ்வு ரீதியிலான பின்னடைவுகளைத் தந்திருக்கிறது. இந்தப் பின்னடைவுகளு க்கு மத்தியிலும் நாங்கள் எங்கள் குழந்தைகளின் கல்வியை மேம்படுத்த எம்மாலான பணியை செய்கிறோம். ஆசிரியர்களும் பொறுப்புணர்ந்து செயலாற்ற வேண்டும்.

இப்போது சமாதானப் பேச்சுக்களில் தமிழ் மக்கள் ஏமாற்றப்பட்டுள்ள நிலையில் தமிழினம் தனது இருப்பை உறுதி செய்வதற்கு- காப்பாற்றிக் கொள்வதற்கு போராடுவ தைத் தவிர வேறு வழி ஏதும் இல்லை.

சிங்களப் பேரினவாதமும் தமிழரை அழித்து விடுவதில் கண்ணும் கருத்துமாக இருக்கிறது. அந்த நிலைமையில் போராடிப் பெறுவதை தவிர நமது இனம் வாழ வேறு மார்க்கம் இல்லை- என்றார் செ.வ.தமிழேந்தி.

தமிழீழ தேசியத் தலைவர் அவர்களின் 50 ஆவது பிறந்தநாள் பரிசாக பாடசாலைகளுக்கு வகுப்பறைக்கட்டடங்களை வழங்கும் திட்டத்திற்கு அமைய உடையார்கட்டு மகா வித்தியாலயத்துக்கு 87 லட்சம் ரூபா செலவில் வகுப்பறைக் கட்டடம் நிதித்துறையால் கட்டிக்கொடுக்கப்பட்டுள்ளது.

வகுப்பறைக் கட்டட கையளிப்பு நிகழ்வில் பொதுச் சுடரை கட்டுமாணப் பொறியியலாளர் பணிப்பாளர் ஈசன் ஏற்றிவைத்தார்.

தமிழீழ தேசியக் கொடியை தமிழீழ கல்விக்கழகப் பொறுப்பாளர் வெ. இளங்குமரன் ஏற்றிவைத்தார்.

வகுப்பறை கட்டடத்தை ஆவணத்தில் கையெழுத்திட்டு செ.வ. தமிழேந்தி பாடசாலை முதல்வரிடம் கையளித்தார்.

## வன்னியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆகியோருடன் தொடர்புகொண்டுள்ளோம்.

இது குறித்து விரைவில் நடவடிக்கை எடுக்கப்படாவிடில் சிகிச்சையை முடித்துக் கொண்ட நோயாளர்கள் வெளியில் தங்குவதற்கான வசதிகளை தாங்களே செய்து கொள்ளவேண்டிய நிலை ஏற்படலாம் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

யாழ்.போதனா வைத்தியசாலையில் தற்போது மருந்துப் பொருள்களுக்கு தட்டுப்பாடு இல்லை என்றும் பணிப்பாளர் கூறினார். (111)

## முகமாலையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஷெல் மற்றும் பீரங்கித் தாக்குதல்களும் விமானக் குண்டுவீச்சுகளும் நடத்தப்பட்டன என்றும் பின்னர் தரைத் துருப்புக்கள் புலிகளின் நிலைகளை நோக்கி முன்னேறித் தாக்குதல் நடத்தின என்றும் பிரிகேடியர் பிரசாத் சமரசிங்க மேலும் தெரிவித்தார்.

இந்தச் சண்டையில் விடுதலைப் புலிகளுக்குச் சேதங்கள் ஏற்படுத்தப்பட்டிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

### மூன்று முனைகளில் முன்னேற்றம்

நூற்றுக்கணக்கான துருப்பினர் மூன்று முனைகளில் புலிகளின் பகுதிகளை நோக்கி சுமார் ஒரு கிலோமீற்றர் தூரம் முன்னேறிச் சென்றனர் என்று ஏ.எவ்.பி. செய்தி ஏஜென்ஸி தெரிவித்தது.

ஆனால், அதனை விடுதலைப் புலிகளின் இராணுவப் பேச்சாளர் இராசையா இளந்திரையன் மறுத்ததாக இணையத் தளச் செய்திகள் தெரிவித்தன.

புலிகளிடம் இருந்து கடும் எதிர்ப்பை எதிர்கொள்ளவேண்டி நேர்ந்ததால் 125 துருப்பினர் காயங்களுக்கு உள்ளாகினர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

மரணமான மற்றும் காயமடைந்த இராணுவச் சிப்பாய்களை ஐந்துக்கும் மேற்பட்ட பஸ்கள் களத்திலிருந்து பலாலிக்கு எடுத்துச் சென்றதாக 'தமிழ் நெற்' தெரிவித்தது.

### புலிகளுக்கு இழப்பு இல்லை

இதேவேளை -

மோதலின்போது விடுதலைப் புலிகளுக்கு இழப்புக்கள் ஏற்படவில்லை என்று புலிகளின் இராணுவப் பேச்சாளர் இளந்திரையன் மேலும் தெரிவித்தார். (ஐ-12)



நெதர்லாந்து தமிழர் உரிமை மையம் ஏற்பாடு செய்த விழிப்புப் போராட்டம் கடந்த வெள்ளியன்று நெதர்லாந்தின் கோர்கு கோவாட் மாநகர சபை முன்றிலில் நடைபெற்றது. போராட்டத்தின் முக்கியத்துவம் குறித்து நெதர்லாந்து வாசிகளுக்கு விளக்கமளிக்கிறார் ஈழத் தமிழர் ஒருவர்

கணக்கீடு
P.பகீரதன்
A/L 2007/2008
கட்டுப்பாட்டுக்க/சு
Sat / Sun 12-1
ஆரம்பம்
10.09.2006 (இன்று)
நாவலர்
ஆனைப்பந்தி, யாழ்.

## மரண அறிவித்தல்

### திருமதி சரவணமுத்து அன்னம்மா

அளவெட்டி வடக்கைச் சேர்ந்த திருமதி சரவணமுத்து அன்னம்மா அவர்கள் நேற்று (9.9.2006) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சரவணமுத்துவின் அன்பு மனைவியும் செல்லத்துரை (இளைப்பாறிய மக்கள் வங்கி பிரதி முகாமையாளர்) கதிர்காமத்தம்பி ( உரிமையாளர்- மதுபானசாலை சாவகச்சேரி) காலஞ்சென்ற சற்குணசிங்கம்,பாலசுந்தரேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயாரும் சந்திரவதனா, இந்திராணி, செல்வராணி, ஆறுமுகம் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியும் தயாளன் (ஜேர்மனி) தயாநிதி (லண்டன்) காலஞ்சென்ற தர்சன், தயாரூபன் (பிரான்ஸ்) நிசாலினி, லோகேஸ்வரன், சஜீவன், ரஜீவன், அபர்ணா, கம்ஷாயினி, சயினி (நெதர்லாந்து), சியானி (நெதர்லாந்து), இனியா, தனஞ்செயன், தனுசன், ஐஸ்வரியா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று மாலை 4 மணிக்கு கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் நடைபெற்று பூதவுடல் பிற்பகல் 5 மணியளவில் கல்கிசை பொதுமயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
ச.கதிர்காமத்தம்பி
(மகன்-கொழும்பு )

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் [illegible] 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 10.09.2006 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org